بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

தொகுதி 7 | இதழ் 24

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 575/-

துல்கஅதா 15 - ஹிஜ்ரி கமரி 1443 ★ இஹ்ஸான் 16 - ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ★ 16 ஜூன் 2022

## அல்லாஹ்வின் கட்டளை

وَھُوَ الۡقَاھِرُ فَوۡقَ عِبَادِہٖ وَیُرۡسِلُ عَلَیۡکُمۡ حَفَظَۃً ؕ حَتّٰۤی اِذَا جَآءَ اَحَدَکُمُ الۡمَوۡتُ تَوَفَّتۡہُ رُسُلُنَا وَھُمۡ لَا یُفَرِّطُوۡنَ

**பொருள்** : அவன் தன் அடியார்களிடத்து மிகைத்தவனாவான். அவன் உங்களுக்குப் பாதுகாவலர்களை அனுப்புகின்றான். உங்களுள் எவருக்காவது மரணம் வரும் போது, நம் தூதுர்கள் (அதாவது வானவர்கள்) அவருடைய உயிரைக் கைப்பற்றுகின்றனர். அவர்கள் (அதில்) தவறுவதில்லை. (அல் அன்ஆம் : 62)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## திருக்குர்ஆன் ஞானம், அதன் மீதான நேசம் மற்றும் அதன் உயரிய கருத்துக்களை சித்தீக்கின் அந்தஸ்து வெளிப்படுத்துகின்றது. மனிதன் தனது எல்லா பணிகளிலும் இறைவனைக் காண்கின்ற அந்தஸ்தின் பெயர் ஷஹீது ஆகும்.

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து

பின்னர் இரண்டாவது அந்தஸ்து சித்தீக் ஆகும். கலப்பற்ற மனதுடன் செய்யும் தவ்பாவுடன் உண்மையும் சேராத வரை முழுமையான உண்மையை மனிதன் அடைய முடியாது. திருக்குர்ஆன் அனைத்து உண்மைகளின் தொகுப்பு மற்றும் முழுமையான உண்மையாகும். மனிதன் சுயமே உண்மையாளனாக ஆகாத வரை உண்மையின் சிறப்புகளையும் படித்தரங்களையும் எவ்வாறு அறிய முடியும்? திருக்குர்ஆன் ஞானம்,அதன் மீதான நேசம் மற்றும் அதன் உயரிய கருத்துகளை சித்தீக்கின் அந்தஸ்து வெளிப்படுத்துகின்றது. ஏனென்றால் பொய் பொய்யை ஈர்க்கின்றது. எனவே பொய்யர் ஒருபோதும் திருக்குர்ஆன் ஞானங்களை, உண்மைகளை அறிய முடியாது. இதன் காரணமாகவே لَا یَمَسُّہٗۤ اِلَّا الۡمُطَہَّرُوۡنَ (தூய்மையாக்கப்படுபவர்களைத் தவிர வேறெவரும் அதனைத் தொடமாட்டார்கள்.) (அல்வாகிஆ:80) என்று கூறப்பட்டுள்ளது.

பின்னர் மூன்றாவது படித்தரம் ஷஹீதுடையதாகும். போரில் கொல்லப்படுபவர் அல்லது நதியில் மூழ்கிவிடுபவர் அல்லது தொற்றுநோய்களில் மரணிப்பவர் போன்ற விஷயங்கள் மட்டும் தான் ஷஹீது என்பதற்கு அர்த்தம் ஆகும் என்று பொதுமக்கள் புரிந்து வைத்துள்ளனர். ஆனால் நான் கூறுகின்றேன். இந்த அளவில் மட்டுமே திருப்தி கொள்வதும் அதனை இந்த எல்லைக்குள் மட்டுமே சுருக்கிக் கொள்வதும் நம்பிக்கையாளரின் அழகிற்கு அப்பாற்பட்டதாகும். இறைவனிடமிருந்து உறுதிப்பாடு மற்றும் அமைதிக்கான ஆற்றலை பெறுபவரும் எந்த ஒரு நிலநடுக்கமும், விபத்துகளும் தடுமாற்றமடைய செய்ய முடியாத நபருமே உண்மையில் ஷஹீதாவார்.

அவர் துன்பங்கள் மற்றும் கடினங்களில் நெஞ்சுரத்துடன் நிற்கின்றார். எந்த அளவுக்கு என்றால் இறைவனுக்காக அவருக்கு உயிரையே கொடுக்க நேரிட்டாலும் அவருக்கு அசாதாரண முறையில் உறுதிப்பாடு கிடைக்கின்றது. அவர் எவ்வகையான வேதனையையோ அல்லது

இதன் தொடர்ச்சி 11-ஆம் பக்கம்...

## அந்த காலத்தில் உலகம் அறிந்திராத "பால் உருவாகும் வழிமுறை" இந்த வசனத்தில் கூறப்பட்டுள்ளது. அந்த வழிமுறையை உலகம் பின்னரே கண்டுபிடித்தது. திருக்குர்ஆனின் சொற்கள் அறிவியலின் தற்போதைய ஆராய்ச்சிக்கு முற்றிலும் பொருத்தமானதாக உள்ளன.

وَاِنَّ لَکُمۡ فِی الۡاَنۡعَامِ لَعِبۡرَۃً ؕ نُسۡقِیۡکُمۡ مِّمَّا فِیۡ بُطُوۡنِہٖ مِنۡۢ بَیۡنِ فَرۡثٍ وَّدَمٍ لَّبَنًا خَالِصًا سَآئِغًا لِّلشّٰرِبِیۡنَ

(அந்நஹ்ல்:67)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த வசனத்திற்கு விளக்கமளித்தவாறு இவ்வாறு கூறுகின்றார்கள் :

திருக்குர்ஆனை இறக்கக் கூடியவன் உலகை படைத்தவனும் ஆவான் என்பதற்கு இந்த வசனம் அத்தாட்சியாக உள்ளது. ஏனென்றால் அந்தக் காலத்தில் உலகம் அறிந்திராத "பால் உருவாகும் வழிமுறை" இந்த வசனத்தில் கூறப்பட்டுள்ளது. அந்த வழிமுறையை உலகம் பின்னரே கண்டுபிடித்தது. அது என்னவென்றால் உணவு வயிற்றிலிருந்து குடலுக்கு செல்கின்றது. அதிலிருந்து சாணம் தயாராகின்றது. பின்னர் அதிலிருந்து ஒரு பொருள் இரத்தமாக மாறுகின்றது. பின்னர் அந்த இரத்தம் பாலாக ஆகின்றது. திருக்குர்ஆன் இறங்கிய பிறகு நடைபெற்ற ஆராய்ச்சிகளிலிருந்து நிரூபணம் ஆகியுள்ள உண்மை இதுவாகும். எனவே ஆரம்ப கால திருக்குர்ஆன் விரிவுரையாளர்களின் தவறுகளை எடுத்து வைத்து பிற்கால விரிவுரையாளர்கள் இதனை வெளிப்படுத்தியுள்ளனர். அதாவது உண்மையில் சாணத்திலிருந்து இரத்தமும் இரத்தத்திலிருந்து

இதன் தொடர்ச்சி 11-ஆம் பக்கம்...

## நபிமொழி

**சந்தேகத்திற்குரிய விஷயங்களிலிருந்து விலகுவதற்கு அறிவுரை :**

2051 : ஹஸ்ரத் நுஃமான் பின் பஷீர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஹலாலும் (அனுமதிக்கப்பட்டதும்) தெளிவானதாகும். ஹராமும் (விலக்கப்பட்டதும்) தெளிவானதாகும். இவ்விரண்டிற்குமிடையில் சில சந்தேகத்திற்குரிய விஷயங்களும் உள்ளன. எனவே பாவம் எனச் சந்தேகிக்கும் காரியங்களை விட்டுவிடுபவர் தெளிவான பாவத்தை முதல் வழிமுறையிலேயே விட்டுவிட்டவர் ஆவார். பாவம் எனும் சந்தேகப்படுபவற்றை செய்ய துணிகின்றவர் தெளிவான பாவங்களில் வீழ்ந்துவிடக் கூடும். கீழ்ப்படியாமைக்குரிய விஷயங்கள் அல்லாஹ்வின் புறமிருந்து அமைக்கப்பட்ட மேய்ச்சல் நிலம் ஆகும். அந்த மேய்ச்சல் நிலத்திற்கு அருகில் மேய்கின்றவர் அதற்குள் வீழ்ந்து விடக்கூடும். (ஸஹீஹ் புகாரி தொகுதி 4, பாடம் : வியாபாரம், காதியான் பதிப்பு - 2008)

## இந்த இதழில்

- திருக்குர்ஆன்
- நபிமொழி
- மல்ஃபூஸாத்
- தஃப்ஸீரே கபீர்
- குத்பா பேருரை
  ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் குத்பா பேருரை (13 மே 2022)
- ஹுஸூர் அவர்களின் ஜெர்மனி சுற்றுப்பயணம் - 2013

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

## ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க கலீஃபா ராஷித், சித்தீக்கே அக்பர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் சிறப்புகள் மற்றும் உயர் அந்தஸ்து

எந்த வாளை அல்லாஹ் நிராகரிப்பாளர்களுக்காக உறையிலிருந்து வெளியே எடுத்துள்ளானோ அதனை நான் உறையில் வைக்க மாட்டேன். ( ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) )

ஸஜாஹ் பின்த் ஹாரிஸ் மற்றும் மாலிக் பின் நுவைராவிற்கு எதிராக நடைபெற்ற போர்களின் விளக்கமான குறிப்புகள்

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாத்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 13 மே 2022,** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ஆண்டு ஹிஜ்ரத் மாதம் **13ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் காலத்தில் நடைபெற்ற குழப்பங்களுக்கு எதிராக நடைபெற்ற போர்களைப் பற்றி கூறப்பட்டிருந்தது. அதில் ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் புதாஹ் பகுதியின் பக்கமும், மாலிக் பின் நுவைராவின் பக்கமும் முன்னேறிச்சென்ற விளக்கம் எடுத்துரைக்கப்பட்டது. புதாஹ் என்பது பனூஅஸது கோத்திரத்தின் ஒரு நீரூற்று ஆகும். மாலிக் பின் நுவைரா பனூதமீமின் ஒரு கிளையான பனூயார்பூஃ கோத்திரத்தைச் சார்ந்தவராக இருந்தார். அவர் ஹிஜ்ரி 9ஆம் ஆண்டில் தனது சமுதாயத்துடன் மதீனாவில் வந்து இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். மாலிக் பின் நுவைரா தனது சமுதாயத்தின் தலைவர்களில் ஒருவராக இருந்தார். அரேபியாவின் மிகச் சிறந்த போர் வீரர்களில் ஒருவராக அவர் கருதப்பட்டு வந்தார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அவரது சமுதாயத்தின் ஸகாத் செல்வங்களை வசூல் செய்வதற்கும் ஒன்று கூட்டுவதற்குமுரிய பணியை ஒப்படைத்தவாறு ஸகாத் அதிகாரி என்ற பொறுப்பில் அவரை நியமனம் செய்தார்கள். ஆனால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மரணம் நிகழ்ந்தபோதும் மார்க்கப் புறக்கணிப்பு மற்றும் கிளர்ச்சியின் அலை எழுந்தபோதும் மாலிக் பின் நுவைராவும் முர்தத் ஆகக்கூடியவர்களில் ஒருவனாக இருந்தான். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மரணச் செய்திகிடைத்த போது அவன் மகிழ்ச்சியுடன் கொண்டாடினான். அவனது வீட்டுப் பெண்கள் மருதாணி பூசிக் கொண்டனர். மேளம் கொட்டினர். மேலும் மிக அதிகமாக மகிழ்ச்சியையும் கொண்டாட்டத்தையும் வெளிப்படுத்தினர். மேலும் ஸகாத் கடமை என்று கூறிவந்ததுடன் ஸகாத் தொகையை முஸ்லிம்களின் தலைமையகத்திற்கு அதாவது மதீனாவிற்கு அனுப்ப வேண்டும் என்றும் கூறிவந்த தனது சமுதாயத்தைச் சார்ந்த முஸ்லிம்களை அவர்கள் கொலை செய்தனர். எனவே தண்டனை வழங்கப்பட்ட ஒவ்வொரு நபரும் அல்லது எவர்களுக்கெதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டதோ அவர்கள் மார்க்கப் புறக்கணிப்பை மட்டும் மேற்கொள்ளவில்லை மாறாக அவர்கள் முஸ்லிம்களுக்கு பாதிப்பை ஏற்படுத்த முயற்சி செய்தனர்.

எவ்வாறிருப்பினும் இது தொடர்பாக மேலும் எழுதப்பட்டுள்ளது. அதாவது ஒரு பக்கம் அவர்கள் ஸகாத் கொடுக்க மறுத்துவிட்டார்கள். மேலும் ஒன்று திரட்டிய ஸகாத் செல்வங்களை தனது சமுதாயத்திடம் திருப்பி கொடுத்துவிட்டார்கள். மற்றொரு பக்கம் ஒரு பெரும் படையை அழைத்துக் கொண்டு மதீனாவின் மீது தாக்குதல் நடத்த வந்திருந்த பொய் நபித்துவ வாதம் செய்யக் கூடியவளும், கிளர்ச்சி செய்யக் கூடியவளுமான ஸஜாஹ் பின்த் ஹாரிஸுடன் அவன் இணைந்து கொண்டான்.

(அல்அஸாபா ஃபீய் தம்மீஸூஸ் ஸஹாபா தொகுதி 5, பக்கம் 560- தாருல் குதுபில் இல்மிய்யா பெய்ரூத்) (அபூன் நஸ்ர் மொழிபெயர்ப்பு செய்த சீரத் ஸய்யிதுனா சித்தீக் அபூபக்ர் எனும் நூல் பக்கம் 598, 713-முஸ்தாக் புக் கார்னர் லாஹூர்) (முஃஜமுல் பல்தான் தொகுதி 1, பக்கம் 527)

ஸஜாஹ்வின் அறிமுகம் இவ்வாறாகும். அவளது பெயர் ஸஜாஹ் பின்த் ஹாரிஸ் ஆகும். உம்மே ஸாதிர் சுட்டுப்பெயர் ஆகும். அரேபியாவின் ஒரு பெண் பாதிரியாக அவள் இருந்தாள். மேலும் அரேபியாவின் மார்க்கப் புறக்கணிப்பிற்கு முன்னதாக அல்லது அந்த சமயத்தில் தோன்றி பொய் நபித்துவ வாதிகள் மற்றும் கிளர்ச்சி செய்த சமுதாய தலைவர்களில் அவளும் ஒருவராக இருந்தாள். ஸஜாஹ் பனூ தமீம் கோத்திரத்தைச் சார்ந்தவளாக இருந்தாள். தாயின் மூலமாக அவளது பரம்பரை பெரும்பான்மை கிறித்தவர்களாக இருந்த பனூ தகல்லப் கோத்திரத்தில் சென்று இணைகிறது. ஸஜாஹ் சுயமே கிறித்தவராக இருந்தாள். தனது கிறித்துவ கோத்திரம் மற்றும் குடும்பத்தின் காரணமாக அவள் கிறித்துவ மார்கத்தின் மிகப் பெரிய பெண் அறிஞராக இருந்தார். அவள் ஈராக்கிலிருந்து தனது சீடர்களுடன் வந்திருந்தாள். மேலும் மதீனாவின் மீது தாக்குதல் நடத்த எண்ணம் கொண்டிருந்தாள். சில வரலாற்றாசிரியர்கள் இவ்வாறு எழுதுகின்றனர்: சூழ்நிலையை கருத்தில் கொண்டு வீழ்ச்சியடைந்து வந்த ஈரானிய அரசாங்கத்தின் அதிகாரத்தை சிறிது தக்க வைத்துக் கொள்ளும் பொருட்டு ஈரானியர்களின் சதித்திட்டத்திற்கு ஏற்ப ஸஜாஹ் அரேபியாவில் நுழைந்திருந்தாள். எவ்வாறிருப்பினும் இந்த காரணிகளின் தாக்கத்திற்குள்ளாகி ஸஜாஹ் அரேபிய தீபகற்பத்தில் நுழைந்திருந்தாள். முதன் முதலில் தனது சமுதாயமான பனூ தமீமை அவள் சென்றடைவது இயற்கையான ஒரு விஷயமாக இருந்தது. ஒரு கூட்டம் ஸகாத் கொடுக்க வேண்டும் என்று கூறி இறைத் தூதரின் கலீஃபாவிற்கு கட்டுப்படுவதற்கும் தயாராக இருந்தது. ஆனால் அக்கோத்திரத்தின் இரண்டாவது பிரிவினர் அதனை எதிர்த்துக் கொண்டிருந்தனர். மூன்றாவதாக ஒரு பிரிவினர் இருந்தனர். அவர்களுக்கு

என்ன செய்ய வேண்டும்? என்ன செய்யக் கூடாது? என்பது புரியவில்லை. எவ்வாறிருப்பினும் இந்த கருத்துவேறுபாடு எந்த அளவிற்கு கடுமையானதென்றால் பனூ தமீம் கோத்திரத்தினர் தங்களுக்குள்ளேயே சண்டையிட்டு மடிய தொடங்கினர். இதற்கிடையில் அந்த கோத்திரங்கள் ஸஜாஹ்வின் வருகை பற்றி செய்தியை செவியுற்றனர். 'ஸஜாஹ் மதீனா சென்றடைந்து அபூபக்ர் (ரலி) அவர்களின் படையுடன் போர் புரிய எண்ணம் கொண்டிருக்கிறார் என்பதும் தெரிய வந்தது. பின்னர் கருத்துவேறுபாடு மேலும் தீவிரமடைந்தது. தனது மகத்துவ மிக்க படையுடன் தீடிரென பனூ தமீமை சென்றடைந்துவிடுவோம் என்ற எண்ணத்துடனும், தனது நபித்துவ வாதத்தின் அறிவிப்பை செய்து தன் மீது ஈமான் கொள்வதற்கு அழைப்பு கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்துடனும் ஸஜாஹ் முன்னேறிக் கொண்டே வந்தாள். முழுக் கோத்திரமும் தன்னுடன் இணைந்து கொள்ளும். மேலும் பனூ யர்பூஃவின் நபி குரைஷிகளின் நபியை விட சிறந்தவர் ஆவார் என்று உயைய்யனாவைப் போன்று பனூ தமீமும் கூற தொடங்கிவிடுவார்கள் என்பது அவளது எண்ணமாக இருந்தது. ஏனென்றால் முஹம்மது (ஸல்) அவர்கள் மரணமடைந்துவிட்டார்கள். ஆனால் ஸஜாஹ் உயிருடன் இருக்கின்றாள். அதன் பிறகு பனூதமீமுடன் மதீனாவை நோக்கி புறப்படுவோம். மேலும் அபூபக்ர் (ரலி) அவர்களின் படைகளை எதிர்கொண்ட பிறகு வெற்றி பெற்று மதீனாவை கைபற்றி விடலாம் என்பதும் அவளது திட்டமாக இருந்தது. எவ்வாறிருப்பினும் ஸஜாஹ் மற்றும் மாலிக் பின் நுவைராக்கிடையில் தொடர்பும் ஏற்பட்டது. ஸஜாஹ் தனது படையுடன் பனூ யர்பூஃவின் எல்லையை சென்றடைந்துவிட்ட போது அங்கு நின்றுவிட்டாள். மேலும் கோத்திரத்தின் தலைவர் மாலிக் பின் நுவைராவை அழைத்து, சமாதானம் பேசி மதீனாவின் மீது தாக்குதல் நடத்துவதற்காக தம்முடன் செல்லும்படி அழைப்பு கொடுத்தாள். மாலிக் அந்த சமாதான அழைப்பை ஏற்றுக் கொண்டான். ஆயினும் மதீனாவின் மீது தாக்குதல் நடத்தும் எண்ணத்திலிருந்து விலகியிருக்கும்படி ஆலோசனை வழங்கினான். மதீனா சென்றடைந்து அபூபக்ர் (ரலி) அவர்களின் படையை எதிர்கொள்வதை விட முதலில் நமது கோத்திரத்தின் எதிர் சக்திகளை அழித்துவிடுவது சிறந்ததாகும் என்றும் அவன் கூறினான். ஸஜாஹ்விற்கும் அந்த விஷயம் பிடித்திருந்தது. எனவே உமது விருப்பப்படியே ஆகட்டும். நான் பனூ யர்பூஃ கோத்திரத்தின் ஒரு பெண் ஆவேன், நீர் என்ன கூறுவீரோ அதுவே நடக்கும் என்று அவள் கூறினாள். ஸஜாஹ் மாலிக் மட்டுமின்றி பனூ தமீம் கோத்திரத்தின் மற்ற தலைவர்களுக்கும் சமாதானத்திற்கான அழைப்பு கொடுத்தாள். ஆனால் வகீஃயைத் தவிர்த்து வேறெவரும் அந்த அழைப்பை ஒப்புக் கொள்ளவில்லை. அப்போது ஸஜாஹ், மாலிக் மற்றும் வகீஃ ஆகியோருடனும் தனது படையுடனும் சென்று ஏனைய தலைவர்கள் மீது தாக்குதல் நடத்திவிட்டாள். மிகக் கடுமையான போர் நிகழ்ந்தது. அதில் இரு தரப்பிலும் அதிகமான எண்ணிக்கையில் நபர்கள் கொல்லப்பட்டனர். மேலும் ஒரே சமுதாயத்தைச் சார்ந்த மக்கள் ஒருவர் மற்றவரை கைது செய்து கொண்டனர். ஆனால் இந்தப் பெண்மணியைப் பின்பற்றி பெரும் தவறு செய்துவிட்டோம் என்பதை மாலிக் மற்றும் வகீஃ சிறிது காலத்திற்கு பிறகு உணர்ந்து கொண்டனர். அதனால் அவர்கள் ஏனைய தலைவர்களுடன் சமாதானம் செய்து கொண்டனர். ஒருவர் மற்றவரின் கைதிகளை திருப்பி கொடுத்துவிட்டனர். இவ்வாறு பனூதமீம் கோத்திரத்தில் அமைதி நிலைபெற்றுவிட்டது. தற்போது இனி இங்கு நமது பருப்பு வேகாது. நாம் என்ன நோக்கத்துடன் வந்தோமோ அது முழுமையடைய முடியாது என்பதைக் கண்ட ஸஜாஹ் தனது மூட்டை முடிச்சுகளை தூக்கிக் கொண்டு மதீனாவின் பக்கம் இடம் பெயர்ந்தார். நிபாஜ் என்ற இடத்தை அடைந்த போது அங்கு அவ்ஸ் பின் ஹுஸைமாவுடன் மோதல் நிகழ்ந்தது.

அதில் ஸஜாஹ் தோல்வியைத் தழுவினாள். மதீனாவை நோக்கி அவள் முன்னேறி செல்லமாட்டாள் என்பதில் உறுதியான எண்ணம் கொண்ட பிறகே அவ்ஸ் பின் ஹுஸைமா அவளை திரும்பி செல்ல அனுமதித்தார். இந்த சம்பவத்திற்கு பிறகு ஜஸீராவாசிகள் ஓரிடத்தில் ஒன்று கூடினர். இனி தாங்கள் எங்களுக்கு என்ன கட்டளையிடுகின்றீர்கள்? என்று ஸஜாஹ்விடம் கேட்டனர். மாலிக் மற்றும் வகீஃ தமது சமுதாயத்துடன் சமாதானம் செய்து கொண்டனர். அவர்கள் நமக்கு உதவி செய்வதற்கும் தயாராக இல்லை. மேலும் நாம் அவர்களின் நிலத்தை கடந்து செல்வதிலும் அவர்களுக்கு உடன்பாடில்லை. அவர்களிடமும் நாம் இந்த உடன்படிக்கை செய்துள்ளோம். மேலும் மதீனாவிற்கு செல்வதற்கான நமது வழிப்பாதை அடைக்கப்பட்டு விட்டது. தற்போது நாம் என்ன செய்வது? என்று கூறும் என அவர்கள் கேட்டனர். அதற்கு, மதீனா செல்வதற்கான பாதை அடைபட்டுவிட்டதென்றாலும் கவலைப்படுவதற்கு ஒன்றுமில்லை. நீங்கள் யமாமாவிற்கு செல்லுங்கள் என்று ஸஜாஹ் பதில் கூறினாள். அதற்கு அவர்கள் யமாமா வாசிகள் கண்ணியத்திலும் மேன்மையிலும் நம்மை விட முன்னேறியுள்ளனர். மேலும் முஸைலமாவின் ஆற்றலும் வலிமையும் மிக அதிகமாகிவிட்டது என்று கூறினர். ஓர் அறிவிப்பில் வருகிறது. அதாவது அவளது படையின் தலைவர்கள் ஸஜாஹ்விடம் அடுத்தகட்ட நடவடிக்கைப் பற்றி கேட்டபோது அவள்

عَلَيْكُمْ بِالْيَمَامَةِ وَدُفُّوا دَفِيفَ الْحَمَامَةِ
فَإِنَّهَا غَزْوَةٌ صَرَّامَةٌ لَا يَلْحَقُكُمْ بَعْدَهَا مَلَامَةٌ

என்று பதில் அளித்தாள். அதாவது யமாமா செல்லுங்கள். புறாக்களைப் போன்று வேகமாக சென்று அவர்கள் மீது குதிக்கவும். அங்கு மிகக் கடுமையான போரை சந்திக்க நேரிடும். ஆயினும் அதற்குப் பிறகு உங்களுக்கு ஒருபோதும் தலைகுனிவு ஏற்படாது. இந்த முஸஜ்ஜிஹ் முகஃபா வாக்கியங்களை கேட்ட பிறகு படையினர் அவளை நபியாகவும் அவளுக்கு வஹீ வந்ததாகவும் கருதினர். எனவே அவர்களுக்கு அவளது கட்டளையை ஏற்பதை தவிர வேறு வழி தெரியவில்லை. எனவே அவளது கட்டளையை அவர்கள் ஏற்றுக் கொண்டனர்.

(முஹம்மது ஹுஸைன் ஹேக்கல் எழுதி ஷேக் அஹ்மது பானி அவர்கள் மொழியாக்கம் செய்த நூல்- பக்கம் 193-198 இஸ்லாமிய நூலகம்)

ஸஜாஹ் தனது படையுடன் யமாமா வந்தடைந்தபோது முஸைலமாவிற்கு மிக அதிக கவலை ஏற்பட்டது. நான் ஸஜாஹ்வின் படையினருடன் சண்டையிடுவதில் மும்முரமாகிவிட்டால் பின்னர் எனது வலிமை பலவீனம் அடைந்துவிடும். இஸ்லாமியப் படை என் மீது தாக்குதல் தொடுத்துவிடும். மேலும் சுற்றுப்புறத்திலுள்ள கோத்திரங்களும் எனது வலிமையை ஒப்புக் கொள்வதற்கு மறுத்துவிடும் என்று அவன் எண்ணினான். இவ்வாறு சிந்தித்தவாறு அவன் ஸஜாஹ்வுடன் சமாதானம் செய்து கொள்ள தீர்மானித்தான். முதலில் அவளுக்கு அவன் அன்பளிப்புகளை அனுப்பினான். பின்னர் நான் சுயமே அவரை நேரில் சந்திக்க விரும்புகிறேன்

என்று தூது அனுப்பினான்.

சந்திப்பதற்கு முஸைலமாவிற்கு அவள் அனுமதி கொடுத்துவிட்டாள். முஸைலமா பனூ ஹனீஃபாவின் நாற்பது நபர்களுடன் அவளிடம் வந்தான். மேலும் தனிமையில் அவளுடன் பேச்சுவார்த்தை நடத்தினான். அந்த பேச்சுவார்த்தையின் போது முஸைலமா தனது சில வாக்கியங்களை ஸஜாஹ்விடம் கூறினான். அதனால் அவள் மிகுந்த தாக்கத்திற்கு ஆளானாள். ஸஜாஹ்வை முழுவதுமாக தனது கட்டுப்பாட்டில் எடுப்பதற்கும், தன்னுடன் சேர்த்துக் கொள்வதற்காகவும் முஸைலமா இந்த திட்டத்தை முன்வைத்தான். அதாவது நாம் இருவரும் நமது முன்னறிவிப்புகளை ஒன்று சேர்த்துக் கொள்வோம். நாம் நமக்குள் திருமண பந்தத்தில் நம்மை இணைத்துக் கொள்வோம். நாம் திருமணம் செய்து கொள்வோம் என்ற திட்டத்தை அவன் முன்வைத்தான். ஸஜாஹ் அந்த ஆலோசனையை ஒப்புக் கொண்டாள். மேலும் முஸைலாமாவுடன் அவனது முகாமிற்கு அவள் சென்றுவிட்டாள். மூன்று நாட்கள் அங்கு தங்கிய பிறகு அவள் தமது படையினரிடம் திரும்பி வந்தாள். மேலும் தான் முஸைலமாவை உண்மையாளராக கண்டதாகவும் எனவே தான் அவரை திருமணம் செய்து கொண்டதாகவும் அவள் குறிப்பிட்டாள். அதற்கு மஹர் தொகை ஏதாவது நிர்ணயித்தீர்களா? என்று மக்கள் கேட்டனர். மஹர் நிர்ணயிக்கப்படவில்லை என்று கூறினாள். அப்படியென்றால் தாங்கள் திரும்பி செல்லுங்கள். மஹர் தொகையை நிர்ணயித்துவிட்டு வாருங்கள். ஏனென்றால் தங்களைப் போன்ற நபர்கள் மஹர் இல்லாமல் திருமணம் செய்வது அழகு சேர்க்கவில்லை என்றனர். எனவே அவள் முஸைலமாவிடம் திரும்பிச் சென்றாள். மஹர் தொடர்பாக பேசுவதே தனது வருகையின் நோக்கம் ஆகும் என்பதை அவனுக்கு தெரியப்படுத்தினாள். முஸைலமா அவளுக்காக இஷா மற்றும் ஃபஜ்ர் தொழுகையை எளிமைபடுத்திவிட்டான். அதாவது ஃபஜர் மற்றும் இஷா தொழுகைகளை அவன் குறைத்துவிட்டான். அவன் நீக்கிவிட்டான். எவ்வாறிருப்பினும் யமாமாவின் நிலங்களின் வருவாயில் பாதி வருவாயை ஸஜாஹ்விற்கு அனுப்பிவிடுவதாக மஹர் குறித்து முடிவெடுக்கப்பட்டது. அடுத்த வருடத்தின் பாதி வருவாயில் தனது பங்கை முன்னரே கொடுக்க வேண்டும் என்று ஸஜாஹ் கோரிக்கை வைத்தாள். அப்போது முஸைலமா அரையாண்டு வருமானத்தின் பகுதியை கொடுத்துவிட்டான். அதனை பெற்றுக் கொண்டு அவள் ஜஸீராவிற்கு திரும்பிவிட்டாள். மீதமுள்ள அரையாண்டின் வருமானத்தை வசூல் செய்வதற்காக அவள் தனது சில நபர்களை பனூ ஹனீஃபாவிலேயே விட்டுவிட்டாள். ஸஜாஹ் வழக்கம்போல் பனூ தகல்லபிலேயே வசித்து வந்தாள். பிற்காலத்தில் அவள் தவ்பா செய்து இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டுவிட்டாள் என்றும் அவள் தொடர்பாக வருகிறது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்தில் அவள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டாள். எந்த அளவுக்கென்றால் ஹஸ்ரத் அமீர் முஆவியா (ரலி) வறட்சி ஏற்பட்ட வருடத்தில் அவளது கோத்திரத்துடன் அவளை பனூதமீமிற்கு அனுப்பிவிட்டார். முஸ்லிமான நிலையில் மரணம் வரை அங்கேயே தங்கியிருந்தார் என்றும் சிலர் கருதுகின்றனர்.

(முஹம்மது ஹுஸைன் ஹேகல் எழுதி ஷேக் அஹ்மது பானிபதீ உருது மொழியாக்கம் செய்த அபூபக்ர் சித்தீக்(ரலி)என்ற நூல் பக்கம் 198-199) (தாரீகே தபரி தொகுதி 2, பக்கம் 271 தாருல் குதுபில் இல்மிய்யா பெய்ரூத் 2012)

துலைஹா அஸதி விவகாரத்தை முடித்துவிட்டு, புதாஹ்வில் தங்கியிருந்த மாலிக் பின் நுவைராவை எதிர் கொள்ள செல்லும் படி ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி)அவர்கள் கட்டளையிட்டிருந்தார்கள். (தாரீகே தபரி தொகுதி 2 பக்கம் 257- தாருல் குதுபில் இல்மிய்யா பெய்ரூத் 2012)

ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் புதாஹ் வந்தடைந்தபோது அன்னாருக்கு அங்கு எவரும் தென்படவில்லை. ஆனால் அன்னார் இதனை கண்டார்கள். அதாவது மாலிக்கிற்கு தனது விவகாரத்தில் தயக்கம் ஏற்பட்டபோது அவன் தனது அனைத்து கூட்டாளிகளையும் தனது சொத்துகளின் பாதுகாப்பிற்காக அனுப்பி விட்டான். மேலும் ஒன்று கூடுவதற்கு அவன் தடைவிதித்துவிட்டான் என்பதை கண்டார்கள். முதலில் அந்த பெண்ணிடமிருந்து அவன் பிரிந்திருந்தான். அல்லது இதன் காரணமாக போட்டி கடினமாக இருக்கும் என்ற எண்ணம் அவனுக்கு தோன்றியிருக்கும். எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் படைப்பிரிவுகளை இங்கும் அங்கும் அனுப்பினார்கள். மேலும் நீங்கள் சென்றடையும் இடத்தில் முதலில் இஸ்லாத்தின் பக்கம் அழைப்பு கொடுங்கள். எவர் அதற்கு பதிலளிக்க மாட்டாரோ அவரை கைது செய்து கொண்டு வாருங்கள். எவர் போரிடுவாரோ அவரை கொன்று விடுங்கள் என்று படைப்பிரிவினருக்கு அன்னார் கட்டளையிட்டார்கள். மாலிக் பின் நுவைராவையும் அவனுடனிருந்த பனூ தகல்லப் கோத்திரத்தைச் சார்ந்த் ஆஸிம், உபைது, உரீன், மற்றும் ஜஃபர் ஆகிய சில நபர்களையும் அந்தப் படைப் பிரிவுகளில் ஒரு பிரிவு கைது செய்து ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களிடம் அவர்களை கொண்டு வந்தது. அந்தப் படைப் பிரிவில் இருந்த நபர்களில் ஹஸ்ரத் அபூகத்தாதா (ரலி)அவர்களும் ஒருவராக இருந்தார்கள். அவர்களுக்கு கருத்துவேறுபாடு ஏற்பட்டது. இங்கு உர்வாவின் தந்தையிடமிருந்து ஓர் அறிவிப்பு இவ்வாறு கிடைக்கிறது. அதாவது அந்த சந்தர்ப்பத்தில் அந்த போருக்குப் பிறகு நாங்கள் பாங்கு கொடுத்த போதும் இகாமத் கூறியபோதும் தொழுதபோதும் அவர்களும் அவ்வாறே செய்தனர் என்று சில மக்கள் சாட்சியம் கூறினர். ஆனால் மற்றவர்களோ இல்லை அவ்வாறு எதுவும் நடக்கவில்லை என்று கூறினர். அவர்கள் பாங்கு கொடுத்தனர் என்ற விஷயத்திற்கு ஹஸ்ரத் அபூகத்தாதா (ரலி)அவர்கள் சாட்சியம் அளித்தார்கள். சாட்சியத்தின் இந்த கருத்துவேறுபாடு காரணமாக ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் அந்த மக்களை கைது செய்துவிட்டார்கள்.

(தாரீகே தபரி தொகுதி 2 பக்கம் 272,273 தாருல் குதுபில் இல்மிய்யா பெய்ரூத் 2012)

மாலிக் நுவைராவைக் குறித்து இரண்டு வகையான அறிவிப்புகள் கிடைக்கின்றன. ஒரு ரிவாயத்தில் மாலிக் பின் நுவைரா கொலை செய்யப்பட்டான் என்று வருகிறது, மற்றோர் அறிவிப்பில் இவ்வாறு வருகிறது, அதாவது அந்த நாள் இரவில் எந்த அளவிற்கு குளிர் அதிகரித்துவிட்டதென்றால் அவனுக்கு எந்தப் பொருளும் கிடைக்கவில்லை. குளிர் அதிகரிக்கத் தொடங்கியதும் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் அறிவிப்பாளருக்கு கட்டளையிட்டார்கள். அவர் أَدْفِئُوا أَسْرَاكُمْ என்று உரத்த குரலில் கூறினார். அதாவது அவர்களை குளிரிலிருந்து காப்பாற்றுவதற்கு ஏற்பாடு செய்யுங்கள். ஆனால் பனூ கனானாவில் இந்த வாக்கியத்தின் அர்த்தம் வேறொன்றாக இருந்தது. அங்குள்ள சொல் வழக்கில் அந்த சொல்லின் பொருள் கொலை

செய்யுங்கள் என்பதாக இருந்தது. எனவே அந்தக் கைதிகள் அனைவரையும் அவர்கள் கொன்றுவிட்டனர். அந்த கைதிகளை கொலை செய்வதற்கு கட்டளை தரப்பட்டுள்ளது என்று அந்த சொல்லிற்கு உள்ளூர் சொல் வழக்கின் அடிப்படையில் போர் வீரர்கள் புரிந்து கொண்டனர். அதனால் அவர்கள் அனைவரையும் கொன்றுவிட்டனர். ஹஸ்ரத் ஸிரார் பின் அஸ்வர் (ரலி) அவர்கள் மாலிகை கொலை செய்தார்கள்.

மற்றோர் அறிவிப்பில் இவ்வாறு வருகிறது. அப்துல்லாஹ் பின் அஸ்வர் அஸதி அவர்கள் மாலிகை கொலை செய்தார்கள். ஆனால் ஸிரார் பின் அஸ்வர் அவர்கள் மாலிகை கொலை செய்தார்கள் என்று கல்பி கூறுகின்றார்கள். ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் கூச்சலும் சத்தமும் கேட்டபோது தமது கூடாரத்தை விட்டு வெளியே வந்தார்கள். ஆனால் அதற்குள் போர் வீரர்கள் அனைத்து கைதிகளின் கதையை முடித்துவிட்டார்கள். இனி என்ன செய்ய முடியும்? அல்லாஹ் எந்தப் பணியை செய்ய விரும்புகிறானோ அது எந்நிலையிலும் நடந்தே தீருகின்றது.

(தாரீகே தபரி தொகுதி 2 பக்கம் 273,274 தாருல் குதுபில் இல்மிய்யா பெய்ரூத் 2012)

மற்றோர் அறிவிப்பில் இவ்வாறும் வருகிறது; அதாவது ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் மாலிக் பின் நுவைராவை தன்னிடம் அழைத்துக் கொண்டார்கள். ஸஜாஹ்விற்கு ஆதரவாக இருந்தது மற்றும் ஸகாத் கொடுக்க மறுத்தது போன்ற விவகாரங்களில் அவரை எச்சரித்தார்கள். மேலும் ஸகாத் தொழுகையின் தோழன் என்பது உமக்கு தெரியாதா? என்றும் அவரிடம் கேட்டார்கள். அதாவது இரண்டும் ஒரே கட்டளையைப் போன்றதுதான். நீர் ஸகாத் கொடுக்க மறுத்துவிட்டீர் என்று கூறினார்கள். அதற்கு இறைத் தூதர் (ஸல்) அவர்களின் எண்ணமும் அவ்வாறே இருந்தது என்று கூறுவதற்கு பகரமாக உமது தோழரின் எண்ணமும் அதுவாகவே இருந்தது என்று மாலிக் கூறினான். ரஸூல் என்பதற்கு பகரமாக சாஹிப் அல்லது தோழர் என்று கூறி அவன் அழைத்தான். அன்னார் (ஸல்) எங்களது சாஹிப் என்றால் உமது சாஹிப் இல்லையா? என்று ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் கூறினார்கள். பின்னர் ஸிராரே இவரது கழுத்தை வெட்டி விடு என்று கட்டளையிட்டார்கள். பின்னர் அவன் கழுத்து வெட்டப்பட்டது. (டாக்டர் அலி முஹம்மது ஸலாபி அவர்கள் மொழிபெயர்ப்பு செய்த ஸய்யிதுனா அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் சாதனைகள் என்ற நூல்-பக்கம் 332 மக்தபுல் ஃபுர்கான் முஸஃபர் கட் பாகிஸ்தான்)

இது அவனது இறப்பு பற்றிய மற்றோர் அறிவிப்பு ஆகும்.

வரலாறுகளின் ரிவாயத்துகளுக்கேற்ப, இது தொடர்பாக அபூ கத்தாதா (ரலி) அவர்கள் காலித் (ரலி) அவர்களுடன் பேசினார்கள். இருவருக்கிடையிலும் தர்க்கம் ஏற்பட்டது. ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களுடன் கருத்து வேறுபாடு கொண்டவாறு அபூ கத்தாதா (ரலி) அவர்கள் படையிலிருந்து வெளியேறி ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் சென்றுவிட்டார்கள். மேலும் மாலிக் பின் நுவைரா முஸ்லிமாக இருந்த நிலையில் அவரை காலித் (ரலி) கொலை செய்துவிட்டார். பின்னர் அவரது மனைவியை திருமணம் செய்து கொண்டார் என்று அன்னார் புகார் செய்தார்கள். போருக்கு மத்தியில் இதுபோன்ற திருமணத்தை அரபு மக்களும் நல்ல விஷயமாக கருதியதில்லை. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் அபூகத்தாதாவின் நிலைபாட்டிற்கு வலுவாக ஆதரவு தெரிவித்தார்கள்.

(தாரீகே தபரி தொகுதி 2 பக்கம் 273,274 தாருல் குதுபில் இல்மிய்யா பெய்ரூத் 2012)

படைத் தலைவரின் அனுமதியின்றி படையை விட்டுவிட்டு அன்னார் மதீனாவிற்கு வந்ததால் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அன்னாரிடம் மிகவும் கடிந்து கொண்டார்கள். மேலும் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களிடம் திரும்பி செல்லும் படி அன்னாருக்கு கட்டளையிட்டார்கள்.

(தாரீகே தபரி தொகுதி 2 பக்கம் 273 தாருல் குதுபில் இல்மிய்யா பெய்ரூத் 2012)

தாரீகே தபரியில் இதன் கூடுதல் விளக்கம் இவ்வாறு கிடைக்கின்றது. அதாவது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் வந்து காலித் (ரலி) ஒரு முஸ்லிமின் கொலைக்கு பொறுப்பாளி ஆவார். மேலும் இந்த விஷயம் நிரூபிக்க முடியாமல் போனாலும் கூட அவரை கைது செய்யக் கூடிய அளவில் விஷயம் நிரூபணம் ஆகின்றது. இந்த விவகாரத்தில் எந்நிலையிலும் கொலை நிகழ்ந்துள்ளது என்று அன்னார் கூறினார்கள். மேலும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மிகவும் வலியுறுத்தினார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தனது ஊழியர்களையும் இராணுவ அதிகாரிகளையும் ஒருபோதும் கைது செய்தது கிடையாது. எனவே அன்னார் (ரலி) அவர்கள், உமரே! இந்த விவகாரத்தில் மௌனத்தை மேற்கொள்வீராக. ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களுக்கு, தவறான புரிதலால் தவறு ஏற்பட்டுவிட்டது. எனவே அவரைக் குறித்து ஒருபோதும் எதுவும் கூறாதீர் என்று கூறினார்கள். மேலும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மாலிக்கின் கொலைக்கான ஈட்டுத் தொகையையும் செலுத்திவிட்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் காலிதிற்கு கடிதம் எழுதி, வரும் படி கூறினார்கள். அன்னார் வந்தார்கள். அன்னார் (ரலி) சம்பவத்தின் முழு விவரத்தையும் எடுத்துரைத்தார்கள். மேலும் வருத்தம் தெரிவித்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அன்னாரின் வருத்தத்தை ஏற்றுக் கொண்டார்கள்.

(தாரீகே தபரி தொகுதி 2- பக்கம் 273,தாருல் குதுபில் இல்மிய்யா பெய்ரூத் 2012)

ஓர் அறிவிப்பில் ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களின் மதீனா வருகை குறித்த சம்பவம் இவ்வாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

காலித் (ரலி) அந்தப் போரிலிருந்து மதீனாவிற்கு திரும்பி வந்தார்கள். மேலும் மஸ்ஜித் நபவியில் நுழைந்தார்கள். அன்னார் மஸ்ஜிது நபவியில் வந்ததும், நீர் ஒரு முஸ்லிமை கொலை செய்துவிட்டு பின்னர் அவரது மனைவியை அபகரித்து கொண்டீர். இறைவன் மீது ஆணையாக! நான் உம்மை கல் எறிந்து (கொன்று) விடுவேன் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) கூறினார்கள். காலித் (ரலி) அவர்கள் அப்போது ஒரு வார்த்தை கூட தன் நாவால் கூறவில்லை. ஏனென்றால் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் எண்ணமும் அதுவாகவே இருந்தது என்பதை அன்னார் (ரலி) நன்கு அறிந்திருந்தார்கள். அன்னார் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் சென்றுவிட்டார்கள். அனைத்து சம்பவத்தையும் எடுத்துரைத்தார்கள். வருத்தம் தெரிவித்தார்கள். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அவரது வருத்தத்தை ஏற்றுக் கொண்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் திருப்தியை பெற்று அன்னார் எழுந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள்

பள்ளிவாசலில் அமர்ந்திருந்தார்கள்.காலித் (ரலி)அவர்கள் கூறினார்கள்; ஷம்லாவின் மகனே!என்னிடம் வாரும். நீர் என்ன கூறுகின்றீர்! ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அன்னாரிடம் திருப்தி கொண்டுவிட்டார்கள். அதன் காரணமாகவே ஹஸ்ரத் காலித் (ரலி) இவ்வாறு பேசிவிட்டு செல்கின்றார் என்பதை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் புரிந்து கொண்டார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மௌனமாக தனது வீட்டிற்கு எழுந்து சென்றுவிட்டார்கள். காலிதிடம் எதுவும் பேசவில்லை.

(தாரீகே தபரி தொகுதி 2-பக்கம் 274, தாருல் குதுபில் இல்மிய்யா பெய்ரூத் 2012)

மற்றோர் அறிவிப்பிற்கேற்ப மாலிக்கின் சகோதரர் முதம்மிம் பின் நுவைரா ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் தனது சகோதரனுக்கான ஈட்டுத் தொகையை பெறுவதற்கு வந்தார்.எங்களது கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கையை அவர் முன் வைத்தார். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கைதிகளின் விடுதலைக்கான அவரது விண்ணப்பத்தை ஏற்றுக் கொண்டார்கள். மேலும் கட்டளையை எழுதினார்கள். மேலும் மாலிக்கிற்கான ஈட்டுத் தொகையையும் வழங்கிவிட்டார்கள். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களை பணி நீக்கம் செய்ய வேண்டும். அவரது வாளால் குற்றமற்ற முஸ்லிம் கொலை செய்யப்பட்டுள்ளார் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மிகவும் கடுமையாக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை வலியுறுத்தினார்கள். ஆனால் உமரே! அவ்வாறு செய்ய முடியாது. எந்த வாளை அல்லாஹ் நிராகரிப்பாளர்களுக்காக உறையிலிருந்து வெளியில் எடுத்துள்ளானோ அதனை நான் உறையில் வைக்க மாட்டேன் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறிவிட்டார்கள்.

(தாரீகே தபரி தொகுதி 2-பக்கம் 273, தாருல் குதுபில் இல்மிய்யா பெய்ரூத் 2012)

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி)அவர்கள் ஈட்டுத் தொகை வழங்கிவிட்டபோது ஷரீஅத் அடிப்படையில் பின்னர் நீதி நிலைநாட்டப்பட்டுவிட்டது. மேற்கொண்டு நடவடிக்கைக்கான தேவை இருக்கவில்லை. எனவே இந்த விஷயத்தை நிறுத்திக் கொள்ளும்படி ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி)அவர்கள் கூறிவிட்டார்கள்.

இது தொடர்பாக அதாவது மாலிக் பின் நுவைரா விவகாரம் மற்றும் அவரது கொலை தொடர்பான குற்றச்சாட்டுகளுக்கு பதில் வழங்கியவாறு ஹஸ்ரத் ஷாஹ் அப்துல் அஸீஸ் தெஹ்லவி எழுதுகின்றார்கள்; தஹ்ஃபா அஸ்னா அஷ்ரியா எனும் தனது நூலில் அன்னார் எழுதுகின்றார்கள்.

உண்மையில் நடந்த சம்பவத்தை அந்த மக்கள் சரியான முறையில் எடுத்துரைக்கவில்லை. உண்மை நிலவரம் தெரியாத வரை ஆட்சேபனை பொருளற்றது என்பது வெளிப்படையாகும். நம்பத்தகுந்த சீரத் மற்றும் வரலாற்று நூல்களில் அந்த சம்பவத்தின் விளக்கம் இவ்வாறு வருகின்றது.

பொய் நபித்துவ வாதியான துலைஹா பின் குவைலத் அஸதிற்கு எதிரான போரை முடித்துக் கொண்ட போது ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் புதாஹ்வின் சுற்றுவட்டாரத்தின் பக்கம் கவனம் செலுத்தினார்கள். எல்லா பக்கங்களிலும், திசைகளிலும் இராணுவ படைகளை அனுப்பினார்கள். மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டல் மற்றும் வழிமுறைக்கேற்ப படையினருக்கு இவ்வாறு வழிகாட்டல் வழங்கினார்கள். எந்த ஒரு கோத்திரம், சமுதாயம் மற்றும் கூட்டத்தினர் மீதும் போர் தொடுக்கும்போது அங்கு உங்களுக்கு பாங்கு ஓசை கேட்டால் பின்னர் கொலை, கொள்ளை சம்பவங்களிலிருந்து விலகிக் கொள்ளுங்கள். பாங்கு ஓசை கேட்காவிட்டால் பின்னர் அதனை போர் மையமாக ஆக்கிக் கொண்டு முழுமையான முறையில் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள்.

தற்செயலாக அந்தப் படையில் ஜனாப் அபூகத்தாதா அன்சாரி (ரலி) அவர்களும் இருந்தார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் சார்பாக புதாஹ் பகுதியின் தலைமைத்துவ பதவியும், சுற்றுவட்டார பகுதிகளின் ஸதகாக்களை வசூல் செய்கின்ற பொறுப்பும் வழங்கப்பட்டிருந்த மாலிக் பின் நுவைராவை பிடித்து, ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களிடம் அன்னார் கொண்டு வந்தார்கள்.

ஜனாப் அபூகத்தாதா (ரலி) அவர்கள் பாங்கு ஓசை கேட்டதாக சாட்சியம் வழங்கினார்கள். ஆனால் எங்களுக்கு பாங்கு ஓசை கேட்கவில்லை என்று அதே படைப் பிரிவின் ஒரு கூட்டத்தினர் கூறினர். ஆனால் அதற்கு முன்னதாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மரணச் செய்தியை செவியுற்று மாலிக் பின் நுவைராவின் குடும்பத்தினர் மிகவும் கொண்டாடினர் என்ற விஷயம் சுற்றுவட்டாரத்திலுள்ள நம்பத்தகுந்த வழிமுறைகள் மூலமாக உறுதியாகவும், ஆதாரப்பூர்வமாகவும் தெரிய வந்திருந்தது. பெண்கள் கைகளில் மருதாணி பூசிக் கொண்டனர். மேளம் கொட்டினர்.மேலும் மிக அதிகமான மகிழ்ச்சியையும் கொண்டாட்டத்தையும் வெளிப்படுத்தியிருந்தனர். முஸ்லிம்களின் அந்த துன்பமான நேரத்தில் அவர்கள் மகிழ்ச்சியடைந்தனர். பின்னர் மேலும் ஒரு விஷயம் நடந்தது. அதாவது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைக் குறித்து நிராகரிப்பாளர்கள் மற்றும் மூர்த்தக்கள் தங்களது உரையாடலில் பயன்படுத்தி வந்த வார்த்தைகள் மாலிக் பின் நுவைராவுடன் நடைபெற்ற கேள்வி பதில் உரையாடலின் போது அவனது வாயிலிருந்து வெளிவந்தன. அதாவது

قَالَ رَجُلُكُمْ اَوْ صَاحِبُكُمْ

உங்களுடைய நபர் அல்லது உங்களுடைய தோழர் என்று கூறினார். அதுமட்டுமின்றி இந்த விஷயமும் வெளிப்பட்டு இருந்தது. அதாவது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மரணச் செய்தியை கேட்டுவிட்டு, நல்லது நடந்துள்ளது. இந்த நபரின் மரணத்தின் மூலம் நீங்கள் துன்பத்திலிருந்து இரட்சிப்பு பெற்றுவிட்டீர்கள் என்று கூறியவாறு மாலிக் பின் நுவைரா வசூல் செய்யப்பட்ட ஸதகாக்களை தனது சமுதாயத்திடம் திருப்பி கொடுத்துவிட்டான். இந்த நிலைமைகள் மற்றும் தன் முன் அவன்


**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

உரையாடிய முறை ஆகியவற்றிலிருந்து ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களுக்கு அவனது மார்க்கப் புறக்கணிப்பை குறித்து உறுதி ஏற்பட்டிருந்தது. அன்னார் (ரலி) அவர்கள் அவனை கொலை செய்வதற்கு கட்டளை வழங்கிவிட்டார்கள். மேலும் மதீனாவில் இந்த சம்பவத்தின் தகவல் கிடைத்தபோதும் பின்னர் அபூகத்தாதா (ரலி) அவர்கள் கோபமுற்று தாருல் கிலாஃபாவை வந்தடைந்த போதும் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் குற்றவாளியாக்கப்பட்டார்கள்.

எனவே அநியாயமாக கொலை நடந்துள்ளது. ஈட்டுத் தொகை கொடுப்பது அவசியம் ஆகும் என்பதே தொடக்கத்தில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் எண்ணமாக இருந்தது. ஆனால் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களை அழைத்து நிலைமையை விசாரித்தார்கள். அன்னாரிடம் முழு சம்பவத்தையும் கேட்டறிந்தார்கள். நிலைமைகள் மற்றும் சம்பவங்களின் அனைத்து ரகசியங்களும் அன்னாருக்கு வெளிப்பட்டபோது அன்னார் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களை குற்றமற்றவர் என அறிவித்தார்கள். மேலும் எவ்வகையிலும் அன்னாருடன் முரண்படவில்லை. மேலும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அன்னாரை முந்தைய பதவியில் தொடரச் செய்தார்கள்.

(துஹ்ஃபா அஸ்னா அஷ்ரியா உருது பக்கம் 517-518, மொழிபெயர்ப்பு கலீலுர் ரஹ்மான் நுஃமானி தாருல் இஷாஅத் கராச்சி 1982)

மாலிக் பின் நுவைரா கொலை தொடர்பாக மற்றொரு நூலாசிரியர் இவ்வாறு எழுதுகின்றார்;

மாலிக் பின் நுவைரா தொடர்பான அறிவிப்புகளில் ஏராளமான முரண்பாடுகள் உள்ளன. அவர் தொடர்பான அறிவிப்புகளில் அவர் அநீதியிழைக்கப்பட்ட நிலையில் கொல்லப்பட்டாரா? அல்லது அவர் கொலை செய்யப்படுவதற்குரிய நபராக இருந்தாரா? என்பது தொடர்பான அறிவிப்புகளில் முரண்கள் உள்ளன.

மாலிக் பின் நுவைராவின் ஆணவமும் அகந்தையுமே அவனை அழிவிற்குள்ளாக்கியது. அவனிடத்தில் அறிவீனம் எஞ்சியிருந்தது. இல்லையென்றால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்குப் பிறகு கலீஃபா ரஸூலிற்கு கட்டுப்படுவதிலிருந்தும் பைத்துல் மாலிற்கு உரிமை படைத்த ஸகாத் செல்வங்களை வழங்குவதிலிருந்தும் அவன் பின்வாங்கியிருக்க மாட்டான். அவர் (தொடர்ந்து) எழுதுகின்றார் :

எனது சிந்தனையின் படி அந்த நபர் தலைமைப் பதவி மற்றும் பொறுப்பைப் பெறுவதற்கு ஆர்வம் கொண்டவராக இருந்தார். மேலும் அத்துடன் பனூதமீம் கோத்திரத்தைச் சார்ந்த இஸ்லாமிய கிலாஃபத்தை ஒப்புக் கொண்டிருந்த மேலும் அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய கடமையானவற்றை செலுத்தி வந்த தனது சமுதாயத்தின் தலைவர்களில் சில உறவினர்கள் மீது அவனுக்கு காழ்ப்புணர்ச்சி இருந்தது.

மேலும் கிலாஃபத்திற்கு கட்டுப்படுவதின் கீழ் சென்று ஸகாத் போன்றவற்றை செலுத்தி வந்த மக்கள் மீதும் அவனுக்கு காழ்ப்புணர்ச்சி இருந்தது.

அவனது சொல்லும் செயலும் இரண்டுமே இந்த சிந்தனையை ஆதரிக்கின்றன. அவன் முர்தத் ஆகுவதும்,ஸஜாஹ்விற்கு ஆதரவாக இருந்ததும்,ஸகாத் ஒட்டகங்களை தனது மக்களிடையே பங்கிட்டு கொடுத்ததும், அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு ஸகாத் கொடுக்க தடுத்ததும், தமர்ருத் மற்றும் இஸ்யான் தொடர்பான விஷயங்களில் தனது உறவினர்கள் மற்றும் முஸ்லிம்களின் அறிவுரைகளை கேட்க மறுத்ததும், இவை அனைத்தும் அவன் மீதான குற்றச்சாட்டுக்களை உறுதிபடுத்துகின்றன. இவற்றிலிருந்து இந்த நபர் இஸ்லாத்தை விட நிராகரிப்பிற்கு மிக நெருக்கமாக இருந்தார் என்பது வெளிப்படுகிறது. ஒரு பக்கம் தன்னை முஸ்லிம் என்று கூறிவந்தான். முஸ்லிம் என்று கூறப்பட வேண்டுமென விரும்பினான்.மற்றொரு பக்கம் அவன் நிராகரிப்பிற்கு நெருக்கமாக இருந்தான். மாலிக் பின் நுவைராவிற்கு எதிராக எந்த சான்றும், ஆதாரமும் இல்லையென்றாலும் கூட அவன் ஸகாத்தை தடுத்து நிறுத்தியதே அவன் மீதான குற்றச்சாட்டுக்களை நிரூபிப்பதற்கு போதுமான விஷயம் ஆகும். அவன் ஸகாத் செலுத்துவற்கு மறுத்துவிட்டான் என்பது வழக்குரைஞர்களால் நிரூபிக்கப்பட்ட ஓர் உண்மையாகும். இப்னு அப்துஸ்ஸலாம் அவர்களின் நூலான فُحُوْلُ الشُّعَرَاء என்பதில் வருகிறது. அதாவது காலித் (ரலி) அவர்கள் மாலிகிடம் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். மேலும் அவனது நிலைப்பாட்டை மாற்ற முயற்சி செய்தார்கள். ஆனால் மாலிக் தொழுகையை ஏற்றுக் கொண்டான். நான் தொழுவேன் என்று கூறினான். ஆனால் அவன் ஸகாத் கொடுக்க மறுத்துவிட்டான் ஆகிய விஷயங்கள் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டவை ஆகும். முஸ்லிம் (ஹதீஸ் நூல்) விரிவுரையாளர் இமாம் நவவி முர்தத்கள் தொடர்பாக கூறுகின்றார்கள்; இந்த வட்டத்தில் ஸகாத்தை ஏற்றுக் கொண்ட நபர்களும் இருந்தனர். மேலும் அவர்கள் ஸகாத் செலுத்துவதிலிருந்து விலகியிருக்கவில்லை. ஆனால் அவர்களின் தலைவர்கள் அவர்களை அதிலிருந்து தடுத்து வந்தனர். எவர்களுக்கு தொழுகையுடன் ஸகாத் செலுத்துவதும் கடமையாக உள்ளதோ அவர்கள் ஸகாத் செலுத்த வேண்டும் என்று சில மக்கள் இதனை விரும்பி வந்தனர். ஆனால் அவர்களின் தலைவர்கள் அவர்களை அதிலிருந்து தடுத்துவிட்டனர். அவர்களின் கைகளை பிடித்து வைத்துக் கொண்டனர். உதாரணமாக பனூ யர்பூஃ கோத்திரத்தினர். அவர்கள் தமது ஸகாத்தை ஒன்று கூட்டினர். அதனை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு அனுப்ப விரும்பினர். ஆனால் மாலிக் பின் நுவைரா அதனை தடுத்துவிட்டான். அவர்களின் ஸகாத்தை மக்களிடம் பங்கிட்டு கொடுத்துவிட்டான். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மாலிக் பின் நுவைராவின் விவகாரத்தை முழுமையாக விசாரித்தார்கள். பின்னர் ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள், மாலிக் பின் நுவைராவின் கொலை வழக்கில் குற்றமற்றவர் ஆவார் என்ற முடிவுக்கு வந்தார்கள்.

இந்த விவகாரத்தில் உண்மை நிலவரத்தை மற்றவர்களை காட்டிலும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அதிகமாக அறிந்திருந்தார்கள். மேலும் ஆழமான பார்வை கொண்டிருந்தார்கள்.

ஏனென்றால் அன்னார் (ரலி) அவர்கள் கலீஃபாவாக இருந்தார்கள். எல்லா செய்திகளும் அன்னாருக்கு கிடைத்து வந்தன. அன்னார் (ரலி) அவர்களின் ஈமானும் அனைவரையும் விட உயர்ந்ததாக இருந்தது. ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களுடனான தொடர்பில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் நடைமுறையை அன்னார் (ரலி) அவர்கள் பேணி வந்தார்கள். ஏனென்றால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் காலிதிடம் என்ன பொறுப்புகளை ஒப்படைத்திருந்தார்களோ அவற்றிலிருந்து அன்னார் (ஸல்) அவர்கள் அவரை ஒருபோதும் பணி நீக்கம் செய்ததில்லை. சில சமயம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு மனநிறைவை தராத சில விஷயங்கள் வெளிப்பட்டாலும் கூட அவரை அன்னார் (ஸல்) அவர்கள் பணி

நீக்கம் செய்யவில்லை. அன்னார் (ஸல்) அவர்கள் அவருடைய வருத்தத்தை ஏற்றுக் கொண்டார்கள். மேலும் காலிதிற்கு துன்பம் கொடுக்காதீர்கள். அவர் அல்லாஹ்வின் வாள்களில் ஒரு வாள் ஆவார். அவரை அல்லாஹ் நிராகரிப்பாளர்களுக்கு எதிராக நியமித்துள்ளான் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மக்களிடம் கூறினார்கள்.

(டாக்டர் அலி முஹம்மது ஸலாபி அவர்கள் மொழிபெயர்ப்பு செய்த ஸய்யிதுனா அபூபக்ர் சித்தீக் (ரலி)அவர்களின் சாதனைகள் என்ற நூல்-பக்கம் 333-334,337- மக்தபுல் ஃபுர்கான் முஸஃபர் கட் பாகிஸ்தான்)

அடுத்து ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் உம்மே தமீம் பின்த் மின்ஹாலை திருமணம் செய்து கொண்டார்கள் என்று மற்றோர் ஆட்சேபனையும் வருகின்றது. அன்னார் (ரலி) அவர்கள் போர் நடந்து கொண்டிருக்கும் போதே லைலா பின்த் மின்ஹாலை திருமணம் செய்துகொண்டார்கள். இத்தாஹ் முடிவதற்கு கூட காத்திருக்கவில்லை என்று ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களைக் குறித்து ஆட்சேபனை செய்யப்படுகிறது. இந்த திருமணம் பற்றி தாரீகே தபரியில் இவ்வாறு குறிப்பு வருகின்றது. அதாவது ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் உம்மே தமீம் மின்ஹாலின் மகளுடன் திருமணம் செய்தார்கள். மேலும் தூய்மை அடைவதற்கான காலத்திற்காக விட்டுவிட்டார்கள். ஏனென்றால் போர் நடக்கும் போது பெண்களுடன் உறவு வைப்பதை அரேபியர்கள் தீயதாக கருதி வந்தனர். மேலும் அவ்வாறு செய்பவரை கண்டித்து வந்தனர்.

(தாரீகே தபரி தொகுதி 2-பக்கம் 273,தாருல் குதுபில் இல்மிய்யா பெய்ரூத் 2012)

அல்லாமா இப்னு கஸீர் எழுதுகின்றார்கள்;

அவர் அதாவது லைலா பின்த் மின்ஹால் (திருமணத்திற்கு) ஆகுமானவராக ஆகிவிட்டபோது ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் அவரை திருமணம் செய்து கொண்டார்கள்.

(அல்ஹிதாயா வன் னஹாயா லி இப்னி கஸீர் தொகுதி 3 பக்கம் 318 தாருல் குதுபில் இல்மிய்யா பெய்ரூத்)

அல்லாமா இப்னு குலிக்கான் எழுதுகின்றார்கள்;

உம்மே தமீம் மூன்று மாதங்கள் இத்தா இருந்து தனது இத்தா காலத்தை முழுமை செய்தார்கள். பின்னர் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் அனுப்பிய நிக்காஹ்விற்கான தூதுச் செய்தியை அவர் ஒப்புக் கொண்டார். (வஃபியாதுல் அஃயான் பாகம் 5 பக்கம் 10-பதிப்பு தாருல் குதுபில் இல்மிய்யா பெய்ரூத் 1998)

ஹஸ்ரத் ஷாஹ் அப்துல் அஸீஸ் தெஹ்லவி அவர்கள் இந்த ஆட்சேபனைக்கு பதில் அளித்தவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்; உண்மையில் இந்த சம்பவமே கட்டுக் கதையாகும். ஏனென்றால் எந்த முஸன்னதான நம்பத்தகுந்த நூல்களிலும், அந்த அறிவிப்புகள் கிடைக்கவில்லை. சில நம்பகத்தன்மையற்ற நூல்களில் அந்த அறிவிப்புகள் கிடைக்கின்றன என்றாலும் கூட அந்த அறிவிப்புகளிலேயே அதற்கான பதில் உள்ளது. மாலிக் பின் நுவைரா ஒரு நீண்ட காலத்திற்கு முன்னரே அந்த பெண்ணிற்கு தலாக் கொடுத்திருந்தான். அவர் மாலிக் பின் நுவைராவின் மனைவியாக இருந்தார் என்றும் அவரை கொன்றுவிட்டு உடனடியாக ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் திருமணம் செய்து கொண்டார்கள் என்று கூறப்படுகிறது. உண்மையில் திருமணம் செய்து கொள்வதற்காகவே அவரை கொலையே செய்தார்கள் என்றும் கூறப்படுகிறது.

ஆனால் எவ்வாறிருப்பினும் அன்னார் கூறுகின்றார்கள் மாலிக் பின் நுவைரா ஒரு நீண்ட காலத்திற்கு முன்னரே தலாக் கொடுத்திருந்தான். மேலும் அறியாமை காலத்தின் வழிமுறைகளை பேணியவாறு அவரை வீட்டிலேயே அடைத்துவைத்திருந்தான். அறியாமை காலத்து இந்த சடங்குகளை களைவதற்காகவே திருக்குர்ஆனின் இந்த வசனம் இறங்கியிருந்தது.

وَإِذَا طَلَّقْتُمُ النِّسَآءَ فَبَلَغْنَ أَجَلَهُنَّ فَلَا تَعْضُلُوهُنَّ

நீங்கள் பெண்களுக்கு மணவிலக்கு கொடுத்துவிடும் போது அவர்களின் இத்தத் முழுமையாகிவிட்டால் பின்னர் அவர்களை தடுத்து நிறுத்தி வைக்காதீர்கள்.

எனவே அந்தப் பெண்ணின் இத்தா காலம் எப்போதோ முழுமையடைந்திருந்தது. மேலும் நிக்காஹ்வும் ஆகுமானதாக ஆகியிருந்தது.

(துஹ்ஃபா அஸ்னா அஷ்ரியா-மொழியாக்கம்; கலீலுர் ரஹ்மான் நுஃமானி பக்கம் 518, தாருல் இஷாஅத் கராச்சி 1982) ஏனென்றால் அவன் தலாக் கொடுத்துவிட்டு தனது வீட்டில் மட்டும் வைத்திருந்தான்.

ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களின் திருமணம் குறித்து மற்றொரு நூலாசிரியர் எழுதுகின்றார்; உம்மே தமீமின் பெயர் லைலா பின்த் ஸினான் மின்ஹால் ஆகும். இவர் மாலிக் நுவைராவின் மனைவியாக இருந்தார். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் அவளை திருமணம் செய்தது குறித்து பெரும் சச்சரவுகள் உருவாகியுள்ளன. பெரும் தர்க்கங்களும், சண்டைகளும் செய்தவாறு பெரும் விவாதங்கள் நடைபெற்றுள்ளன. அதன் சுருக்கம் இவ்வாறாகும். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் உம்மே தமீமின் அழகில் மயங்கியிருந்தார்கள். மேலும் அவர் மீது காதல் கொண்டிருந்தார்கள். எனவே அன்னாரால் பொறுமை காக்க முடியவில்லை. எனவே தனது கட்டுப்பாட்டில் வந்ததும் அவளை திருமணம் செய்து கொண்டார்கள் என்று காலித் (ரலி) மீது சில மக்கள் இட்டுக் கட்டினார்கள். இதன் பொருள் என்னவென்றால் நவூதுபில்லாஹ் அது திருமணம் அல்ல மாறாக அது விபச்சாரம் ஆகும். எனவே அந்தக் கூற்று கற்பனையானதும், தெளிவான பொய்யும் ஆகும். அது எவ்வகையிலும் நம்பத்தகுந்தவை அல்ல.

அல்லாமா மாவரதி கூறுகின்றார்கள்; மாலிக் பின் நுவைரா ஸகாத்தை தடுத்து நிறுத்தியதன் காரணமாகவே காலித் அவனைக் கொன்றார்கள். அதனால் அவனை கொலை செய்தது ஆகுமானதாக இருந்தது. மேலும் இதன் காரணமாக உம்மே தமீமுடனான அவரது திருமணம் முறிந்து போயிருந்தது. மேலும் முர்த்தக்களின் பெண்கள் தொடர்பான ஷரீஅத் கட்டளை என்னவென்றால் போர் முனையத்தில் அவர்கள் கிடைத்தால் அவர்களை கைது செய்ய வேண்டும். கொலை செய்யக் கூடாது. இமாம் ஸர்கஸி அவர்களும் இதனை சுட்டிக் காட்டியுள்ளார்கள்.

உம்மே தமீம் கைதியாக வந்தபோது காலித் அவர்கள் அவரை தமக்காக தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள். அவர் ஆகுமானவராக ஆனபோது அன்னார் அவருடன் திருமண உறவை ஏற்படுத்திக் கொண்டார்கள்.

ஷேக் அஹ்மது ஷாகிர் சாஹிப் இந்த விவகாரத்தில் கூறுகின்றார்கள்; மேலும் விவரித்தவாறு கூறுகின்றார்கள். காலித் (ரலி) உம்மே தமீம் மற்றும் அவரது மகனை வலக்கரம் சொந்தமாக்கிக் கொண்ட நபர்களின் வட்டத்தில் சேர்த்துக் கொண்டார்கள். ஏனென்றால் அவர் போர்

கைதியாக இருந்தார். அதுபோன்ற பெண்களுக்கு எந்த இத்தும் கிடையாது. அவர் கர்ப்பிணியாக இருந்தால் பிரசவம் முடியும் வரை அவருக்கு அருகில் அவரது எஜமானர் செல்வது ஹராமாகும். அவர் கர்ப்பிணியாக இல்லையென்றால் ஒரு முறை மாதவிலக்கு வரும் வரையிலான காலக் கட்டம் மட்டுமே ஆகும். இது பரிந்துரைக்கப்பட்டதும், ஆகுமானதும் ஆகும். அதில் விமர்சனத்திற்கும் ஏச்சுப்பேச்சிற்கும் இடமில்லை. ஆனால் காலித் (ரலி) அவர்களின் எதிரிகள் அந்த சந்தர்ப்பத்தை தமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டனர். மேலும் மாலிக் பின் நுவைரா முஸ்லிமாக இருந்தார். அவரது மனைவிக்காக அவரை கொன்றுவிட்டார் என்ற பொய் பிரச்சாரத்தில் எதிரிகள் ஈடுபட்டனர். அதே போன்று இந்த திருமணத்தின் மூலம் அரேபியர்களின் பழக்கங்கள் மற்றும் நடைமுறைகளுக்கு அன்னார் மாறு செய்துவிட்டதாகவும் காலித் (ரலி) மீது பழி சுமத்தினர். உதாரணமாக அக்காத் கூறுகின்றார். காலித் (ரலி) மாலிக் பின் நுவைராவை கொலை செய்து அவரது மனைவியை போர் மைதானத்திலேயே திருமணம் செய்தது அறிவீனம் மற்றும் இஸ்லாத்தின் காலத்தில் அரேபியர்களின் நடைமுறைக்கும் அதே போன்று முஸ்லிம்களின் நடைமுறைக்கும் இஸ்லாமிய ஷரீஅத்தின் கட்டளைகளுக்கும் எதிரானதாகும். அக்காதின் இந்தக் கூற்று உண்மைக்கு அப்பாற்பட்டதாகும். இஸ்லாத்திற்கு முன்னர் அரேபியர்கள் பல முறை இவ்வாறு செய்து வந்துள்ளனர். அதாவது போர்களிலும் எதிரிகளை வெற்றிக் கொண்ட பிறகும் அவர்களின் பெண்களை திருமணம் செய்துள்ளனர். மேலும் அதன் மீது பெருமை கொண்டு வந்தனர்.

டாக்டர் அலி முஹம்மது ஸலாபி இது தொடர்பாக எழுதுகின்றார்;ஷரீஅத்தின் அடிப்படையில் பார்த்தால் காலித் ஆகுமான ஒரு பணியைச் செய்துள்ளார். அதற்காக ஷரீஅத் அடிப்படையில் ஆகுமான வழிமுறையை கையாண்டுள்ளார். காலித் போருக்கு மத்தியில் அல்லது அதன் பிறகு உடனடியாக திருமணம் செய்துவிட்டார் என்று காலித் மீது ஆட்சேபனை செய்தால் பின்னர் நினைவிற்கொள்ளவேண்டும். அதாவது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் முரைஸிஃ போர் முடிந்ததும் உடனடியாக ஜுவைரியா பின்த் ஹாரிஸ் அவர்களை திருமணம் செய்து கொண்டிருந்தார்கள். அந்த திருமணம் தனது சமுதாயத்திற்கு மிக அருளுக்குரியதாக நிரூபணமானது. அதாவது அந்த திருமணத்தின் காரணமாக அக்குடும்பத்தின் நூறு நபர்கள் விடுதலை செய்யப்பட்டனர். ஏனென்றால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மாமியார் வீட்டு சொந்தத்தில் அந்த நபர்கள் வந்தனர். அந்த திருமணத்தின் அருளுக்குரிய தாக்கம் என்னவாக இருந்தது என்றால் அவரது தந்தை ஹாரிஸ் பின் ஸிரார் முஸ்லிமாகிவிட்டார். அதேபோன்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கைபர் போருக்குப் பிறகு உடனடியாக ஸஃபியா பின்தே ஹய் பின்தே அக்தபை திருமணம் முடித்தார்கள். இந்த விவகாரத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் முன்மாதிரியும் முன்னுதாரணமும் இருக்கும் போது பின்னர் கண்டிப்பிற்கும், ஏச்சுப் பேச்சிற்கும் எந்தக் காரணமும் இல்லை. (டாக்டர் அலி முஹம்மது ஸலாபி அவர்கள் மொழிபெயர்ப்பு செய்த ஸய்யிதுனா அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் சாதனைகள் என்ற நூல்- பக்கம் 333-336,மக்தபுல் ஃபுர்கான் முஸஃபர் கட் பாகிஸ்தான்)

ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் மீது தேவையின்றி பழி சுமத்தப்பட்டுள்ளது. எனவே தான் இந்த விளக்கத்தை நான் எடுத்துரைத்துள்ளேன். சில குறைமதி கொண்ட நபர்கள் இன்றும் இந்த கேள்வியை எழுப்புகின்றனர். உண்மையில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மீது அவர்கள் இவ்வாறு ஆட்சேபனை செய்கின்றனர். அதாவது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இந்த விவகாரத்தில் சரியானவராக இருந்தார்கள் .நவூதுபில்லாஹ் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் நீதியுடன் நடக்கவில்லை. மேலும் தவறான முறையில் காலித் (ரலி) அவர்களுக்கு ஆதரவாக செயல்பட்டார்கள் என்று கூறுகின்றனர்.

ஆனால் உள்ளபடியே அன்னார் அனைத்து விவகாரங்களையும் சீர்தூக்கிப் பார்த்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் நன்கு ஆய்வு செய்தார்கள். பின்னரே முடிவெடுத்தார்கள். மேலும் அனைத்து குற்றச்சாட்டுகளிலிருந்தும் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களை விடுவித்தார்கள்.

ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் யமாமாவை நோக்கி புறப்பட்டது தொடர்பாக இவ்வாறு குறிப்பு வருகின்றது; அஸது, கத்ஃபான் கோத்திரம் மற்றும் மாலிக் பின் நுவைரா ஆகியோருடனான போரை முடித்துக் கொண்டு யமாமாவிற்கு செல்லும் படி ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களுக்கு கட்டளை வழங்கியிருந்தார்கள். மேலும் அவ்வாறு செய்யும்படி மிகவும் வலியுறுத்தியிருந்தார்கள்.

ஷரீக் பின் அப்தஹ் ஃபஸாரி அவர்கள் கூறுகின்றார்கள்; புஸாஹாப் போரில் பங்குபெற்றிருந்த நபர்களில் நானும் ஒருவனாக இருந்தேன். நான் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் சமூகத்தில் ஆஜரானேன். அன்னார் என்னை ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களிடம் அனுப்பி வைத்தார்கள். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களின் பெயரில் (எழுதப்பட்ட) ஒரு கடிதம் என்னிடம் இருந்தது. அதில் இவ்வாறு எழுதப்பட்டிருந்தது. அம்மா பஃது. உமது தூதுவர் மூலம் உமது கடிதம் கிடைத்தது. அதில் புஸாஹாப் போரில் அல்லாஹ்வின் வெற்றி மற்றும் உதவியை நீர் குறிப்பிட்டுள்ளீர். மேலும் அஸது மற்றும் கத்ஃபான் கோத்திரத்தினருடன் நீர் நடந்து கொண்ட விவகாரமும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் நான் யமாமாவை நோக்கி செல்வதாகவும் நீர் அதில் எழுதியுள்ளீர். நான் உங்களுக்கு வஸிய்யத் (அறிவுரை) வழங்குகிறேன். ஏகனும் இணையற்றவனுமாகிய அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். உங்களுடன் இருக்கும் முஸ்லிம்களுடன் மென்மையுடன் நடந்து கொள்ளுங்கள். அவர்களுடன் தந்தையைப் போன்று நடந்துகொள்ளுங்கள். காலிதே! எச்சரிக்கை! பனி முகைராவின் ஆணவம் மற்றும் அகந்தையிலிருந்து தப்பித்துக் கொள்ளவும்.எவர்களின் கூற்றை நான் ஒருபோதும் மறுத்ததில்லையோ அவர்களின் கூற்றை உமது விவகாரத்தில் நான் ஏற்கவில்லை. எனவே பனூ ஹனீஃபாவை எதிர்கொள்ளும்போது மிக விழிப்புடன் இருக்கவும். நினைவிற் கொள்ளவும்.பனூ ஹனீஃபாவைப் போன்று இதுவரை நீர் வேறு எவரையும் எதிர்கொள்ளவில்லை.

அவர்கள் அனைவருமே உமக்கு எதிராக உள்ளனர். அவர்களின் நாடு மிகவும் பரந்துப்பட்டதாகும். எனவே நீர் அங்கு சென்றடைந்ததும் நீர் சுயமே படையை நேரடியாக வழி நடத்துவீராக. மேமனாவில் ஒருவரையும், மய்ஸராவில் ஒருவரையும் குதிரை சவாரிகளுக்கு ஒருவரையும் (தலைவராக) நியமிப்பீராக. உம்முடன் இருக்கும் பெரும் சஹாபிகளிடமும், முஹாஜிர் மற்றும்

அன்சார் சஹாபிகளிடமும் தொடந்து ஆலோசனை செய்து வருவீராக. அவர்களின் மேன்மை மற்றும் அந்தஸ்தை அறிந்து கொள்வீராக. முழு தயாரிப்புடன் போர் மைதானத்தில் எதிரி அணிவகுத்து நிற்கும் போது அவர்களை கடுமையாக தாக்குவீராக.

அவர்களின் கைதிகளை வாள்களால் தூக்குங்கள். கொலைகளின் மூலம் அவர்களிடம் அச்சத்தையும் பதற்றத்தையும் ஏற்படுத்துவீராக. அவர்களை நெருப்பில் எறியுங்கள். எச்சரிக்கை! எனது கட்டளைகளுக்கு மாறு செய்யாதீர். وَالسَّلَامُ عَلَيْكَ

இந்தக் கடிதம் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களுக்கு கிடைத்தபோது அன்னார் அதனை படித்துவிட்டு நாங்கள் செவியேற்றுவிட்டோம். மேலும் நாங்கள் அதற்கு முழுமையாக கட்டுப்பட்டு நடப்போம் என்று கூறினார்கள். காலித் முஸ்லிம்களை தன்னுடன் தயார்படுத்தினார். பனூ ஹனீஃபாவை அதாவது எவர்களுக்கு முஸைலமா கஸ்ஸாப் தலைமை ஏற்றிருந்தானோ அவர்களுடன் போர் புரிய புறப்பட்டார்கள். ஸாபித் பின் கைஸ் பின் ஷம்மாஸ் அவர்கள் அன்சார் சகோதரர்களுக்கு அமீராக நியமிக்கப்பட்டிருந்தார்கள். வழிப்பாதையில் எதிர்கொண்ட முர்தத்களுக்கு படிப்பினைக்குரிய தண்டனை கொடுத்தார்கள். அங்கு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்களின் பாதுகாப்பிற்காக சிறந்த ஆயுதங்களை கொண்டிருந்த ஒரு பெரும் படையை அனுப்பினார்கள். ஏனென்றால் காலிதின் படையின் மீது பின்னால் இருந்து எவரும் தாக்குதல் நடத்திவிடக் கூடாது என்பதற்காக அவ்வாறு செய்தார்கள். காலித் அவர்கள் யமாமா செல்லும் பாதையில் முர்தத் ஆகியிருந்த ஏராளமான காட்டரபிகளின் கோத்திரங்களை கடந்து சென்றார்கள். அவர்களுடன் போர் செய்து அவர்களை இஸ்லாத்தின் பக்கம் கொண்டு வந்தார்கள்.வழியில் ஸஜாஹ்வின் மிச்சம் மீதியிருந்த படையை எதிர்கொண்டார்கள். அவர்களையும் சிறப்பாக கவனித்தார்கள். அவர்களை கொலை செய்தார்கள். மேலும் அவர்களுக்கு படிப்பினைக்குரிய தண்டனையை வழங்கினார்கள். பின்னர் யமாமாவிற்கு புறப்பட்டு சென்றார்கள்.

(டாக்டர் அலி முஹம்மது ஸலாபி அவர்கள் மொழிபெயர்ப்பு செய்த ஸய்யிதுனா அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் சாதனைகள் என்ற நூல்- பக்கம் 353-354,மக்தபுல் ஃபுர்கான் முஸஃபர் கட் பாகிஸ்தான்)

யமாமா போரின் விளக்கம் இன்ஷாஅல்லாஹ் எதிர்வரும் நாட்களில் எடுத்துரைக்கப்படும்.

தமிழாக்கம் :

மவ்லவி A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * * *

(ஹுஸுர் அவர்களின் சுற்றுப்பயணம்...
12ஆம் பக்கத் தொடர்ச்சி)

(தத்துவத்தின்) ஆராய்ச்சியில் (நமது பெண்கள் பங்கு பெற்று) உள்ளனர். அங்குள்ள அறிவியல் அறிஞர்களில் ஒருவர் அஹ்மதி பெண் ஆவார். எனவே அஹ்மதி எல்லா இடங்களிலும் பங்கு பெறுகின்றனர். எல்லா இடங்களிலும் பணி செய்கின்றனர். ஆயினும் நமது முதன்மையான கடமைகளை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். மற்ற விஷயங்கள் இரண்டாம்பட்சம் தான் என்பதை அவர்கள் புரிந்து வைத்துள்ளனர்.

எனக்கு எந்த துன்பமும் இல்லை. (அப்படியிருக்க) உங்களுக்கு என்ன துன்பம் உள்ளது? என்று நீங்கள் அவர்களிடம் கேளுங்கள்.

**கேள்வி** : ஜெலட்டின் (GELATIN) ஏராளமான உணவுப் பொருட்களில் காணப்படுகிறது. இது தொடர்பாக ஜமாஅத்தின் நிலைபாடு என்ன?என்று ஒரு வாகிஃபா சிறுமி கேட்டார்.

**பதில்** : இந்த கேள்விக்கு பதில் அளித்தவாறு ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: ஜெலட்டின் பல்வேறு பொருட்களிலிருந்து தயாரிக்கப்படுகிறது. சிலவை விலங்குகளின் எலும்புகளிலிருந்து தயாரிக்கப்படுகிறது. அதில் பன்றியின் எலும்புகளையும் கலந்துவிடுகின்றனர். அவற்றில் பன்றியின் பெயர் எழுதப்பட்டிருக்கும். சிலவை vegitable gelatin ஆகும். அவை ஆலோவேராவிலிருந்து தயாரிக்கப்படுகின்றன. சில வேறு சில செடிகளாகும். பீன்ஸிலிருந்தும் ஜெலட்டின் தயாரிக்கப்படுகின்றது. இந்த ஜெலட்டின் ஹலால் ஆகும். பன்றியிலிருந்து தயாரிக்கப்பட்ட ஜெலட்டின் என்று எதில் எழுதப்பட்டிருக்குமோ அதனை உண்ணாதீர்கள். பிஸ்கட்டுகளில் அதுபோன்ற ஜெலட்டின் இருந்தால் அதில் எழுதப்பட்டிருக்கும். அதுபோன்ற பிஸ்கட்டுகளை சாப்பிடக் கூடாது.

ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள் **:** நீங்கள் படித்துப் பார்க்காமலேயே சாக்லேட்டுகளை சாப்பிட்டுவிடுகிறீர்கள். மேலும் எனக்கு அன்பளிப்பாக அனுப்புகின்ற மக்களும் ஏராளமான நபர்கள் உள்ளனர். நான் அதனை பார்க்கும்போது இதில் ஷேம்பெயின் கலந்துள்ளது. இதில் இன்ன மது கலந்துள்ளது. இதில் இன்ன பொருள் உள்ளது. என்று மிகத் தெளிவாக எழுதப்பட்டிருக்கின்றது. நீங்கள் வாயில் போட்டதும் அதனை மென்று முழுங்கிவிடுகின்றீர்கள். அதன் பிறகு போதை ஏறியதா? இல்லையா? என்பது கூட தெரிவதில்லை.

ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்**:**

தற்போது அவர்கள் எழுத தொடங்கிவிட்டனர். ஆல்கஹால் கலக்காத சாக்லேட்களும் கிடைக்கின்றன. பாக்கட்டுகளுக்கு பின்னால் எழுதப்பட்டிருக்கிறது. எனவே ஹலால் பொருட்களிலிருந்து தயாரிக்கப்பட்ட ஜெலட்டின்களை நீங்கள் உண்ணுங்கள். மற்றவைகளிலிருந்து எல்லாநிலையிலும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களின் காலத்திலும் இந்த கேள்வி எழுந்தது. அதற்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: ஐரோப்பாவிலிருந்து வரக்கூடிய பிஸ்கட்டுகளில் பன்றியின் கொழுப்பு கலந்துள்ளது. எனவே நீங்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். அதனை உண்ணக் கூடாது. பன்றியின் கொழுப்பை பிஸ்மில்லாஹ் கூறி சாப்பிட்டுக் கொள்ளலாம் என்று எண்ணக் கூடாது.

ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்**:**

தற்போது நாம் சிந்திக்காமலேயே காப்பி அடிக்கும் அளவில் தான் நம்மவர்களின் நிலை உள்ளது. அங்கு யூகேவில் அஹ்மதிய்யா புலிட்டன் என்ற அவர்களின் ஒரு பத்திரிக்கை வெளியாகிறது. அதில் உணவுப் பொருட்கள் தயாரிக்கும் வழிமுறைகள் எழுதப்படுகின்றன. அதில் ஒருவர் கேக் தயாரிக்கும் வழிமுறையை காப்பி அடித்துவிட்டார். கேக் எப்படி தயாரிப்பது? என்பது அவருக்கே தெரியாது. ஒருபோதும் அவர் செய்து பார்த்ததுமில்லை. யாரோ ஒரு பெண் அல்லது ஆண் தனது பெயர் பத்திரிக்கையில் வந்துவிடவேண்டும் எண்ணத்தில் recipe எழுதிவிட்டார். அதில் Lard சேர்க்க வேண்டும் என்று இருந்தது. Lard என்பது பன்றியின் கொழுப்பாகும். தற்போது கேக் எப்படி தயாரிப்பது என்று எழுதப்பட்டிருந்த அந்தக் கட்டுரையை எடுத்து ஒருவர் ஜமாஅத் பத்திரிகைக்கு கொடுத்துவிட்டார். அதில் Lard கலக்க வேண்டும் என்றிருந்தது. ஜமாஅத் பத்திரிகையில் அது வந்திருப்பதால் இனி Lard ஹலாலாகிவிட்டது என்றே மக்கள் கருதுவர்.தற்செயலாக அது எனது பார்வையில் பட்டுவிட்டது. இப்படி என்ன கொடுத்துள்ளீர்கள்? என்று நான் கேட்டேன். அதன் பின்னர் அவர்கள் அதற்கு மறுப்பு வெளியிட்டனர். எங்களுக்கு தவறு ஏற்பட்டுவிட்டது என்று எழுதினார்கள். எனவே மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

தொடரும்...........

( நன்றி; அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல் பத்திரிகை 5, 12 ஜூலை 2013 )

* * * * * * *

(மல்ஃபூஸாத்... முதல் பக்கத் தொடர்ச்சி)

வருத்தத்தையோ உணராமலேயே தனது தலையை கொடுத்து விடுகின்றார். மேலும் தனக்கு மீண்டும் மீண்டும் வாழ்வு கிடைக்க வேண்டும் பின்னர் மீண்டும் மீண்டும் அதனை நான் அல்லாஹ்வின் வழியில் கொடுக்க வேண்டும் என்று அவர் விரும்புகின்றார். அவரது ஆன்மாவில் எப்படிபட்ட இன்பமும், மகிழ்ச்சியும் இருக்கின்றது என்றால் அவரது உடலின் மீது படும் ஒவ்வொரு வாளும் அவரை துண்டாக்கும் ஒவ்வாரு தாக்குதலும் அவருக்கு ஒரு புதிய வாழ்வையும், புதிய மகிழ்ச்சியையும் வழங்குகின்றது. இதுதான் ஷஹீதின் பொருள் ஆகும்.

அடுத்து இந்த சொல் ஷஹது (தேனீ) என்ற சொல்லிருந்து அமைந்துள்ளது. கடுமையான இறைவணக்கங்களை மேற்கொள்பவர்களும், இறைவனின் வழியில் எல்லா துன்பங்களையும் கடினங்களையும் சகித்துக் கொள்பவர்களும் கடினங்களை சகித்துக் கொள்ள தயாராகிவிடுபவர்களும் தேனைப் போன்று ஓர் இனிமையை பெறுகின்றனர். فِيهِ شِفَآءٌ لِّلنَّاسِ (அதில் குணம் அளிக்கும் தன்மை உள்ளது. (அந்நஹ்ல்:70) என்பதை தேனீ உண்மைப்படுத்துவதைப் போன்று இந்த மக்களும் ஒரு (வகை)மருந்தாக உள்ளனர். அவர்களது தோழமையில் செல்பவர்கள் ஏராளமான நோய்களிலிருந்து இரட்சிப்பு பெறுகின்றனர்.

எந்த நிலையில் மனிதன் தனது எல்லா பணிகளிலும் இறைவனைக் காண்கின்றானோ அல்லது குறைந்தபட்சம் இறைவனைப் பார்ப்பது போன்று நம்பிக்கை கொள்கிறானோ அந்த அந்தஸ்திற்கு ஷஹீது என்று பெயர் ஆகும்.

(மல்ஃபூஸாத் தொகுதி-1 பக்கம் 375 காதியான் பதிப்பு 2018)

## 127 வது காதியான் ஆண்டு மாநாடு

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் மூஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் 127 வது காதியான் ஆண்டு மாநாட்டினை 23,24,25 டிசம்பர் 2022 (வெள்ளி, சனி, ஞாயிறு) ஆகிய தேதிகளில் நடத்துவதற்கு ஒப்புதல் நல்கியுள்ளார்கள். ஜமாஅத் உறுப்பினர்கள் இப்போதிருந்தே துஆக்கள் செய்தவாறு இந்த அருளுக்குரிய ஜல்ஸாவில் பங்கு பெறும் நிய்யத்துடன் ஏற்பாடுகளை தொடங்கி விடுங்கள். அல்லாஹ் நம் அனைவருக்கும் இந்த இறை மாநாட்டிலிருந்து பயன் பெறுவதற்கான நற்பேறு வழங்குவானாக. மேலும் இந்த ஜல்ஸாவை எல்லா வகையிலும் வெற்றிகரமாக ஆக்குவானாக. மேலும் அது அருளுக்குரியதாக அமைவதற்கும், நல்ல ஆன்மாக்களின் நேர்வழிக்கு காரணியாக அமைவதற்கும் தொடர்ந்து துஆ செய்து வாருங்கள்.

(நாஸிர் இஸ்லாஹ் வ இர்ஷாத் மர்கஸியா, காதியான்)

(தஃப்ஸீரே கபீர்... முதல் பக்கத் தொடர்ச்சி)

பாலும் (உருவாகின்றது). ஆயினும் அவர்கள் வழங்கியுள்ள விளக்கம் முழுமையாக அறிவியலுக்கு பொருத்தமானதாக இல்லை. ஆனால் திருக்குர்ஆனின் சொற்கள் அறிவியலின் தற்போதைய ஆராய்ச்சிகளுக்கு முற்றிலும் பொருத்தமானதாக உள்ளது. அது இவ்வாறாகும். அதாவது உணவு வயிற்றிலிருந்து குடலுக்கு செல்கின்றது. அங்கிருந்து அதன் செரிக்கப்பட்ட நுட்பமான பங்கின் ஒரு பகுதி சில நரம்புகள் மூலமாக நேரடியாக இதயம் வரை செல்கின்றது. பின்னர் நரம்புகளில் விழுந்து இரத்தமாக ஆகிவிடுகின்றது. மேலும் மற்றொரு நுட்பமான பங்கு குடலிலிருந்து நேரடியாக கல்லீரலுக்கு சென்று அங்கிருந்து நரம்புகள் மூலமாக இதயத்தில் விழுந்து இரத்தமாக ஆகிவிடுகின்றது. பின்னர் அந்த இரத்தம் பால் மடுவிற்கு அருகில் செல்லும் போது அங்கு அல்லாஹ் எப்படிபட்ட ஏற்பாடுகளை உருவக்கியுள்ளான் என்றால் அந்த இரத்தம் அங்கு வந்த பிறகு பால் ஆக மாறிவிடுகிறது.

பழைய காலத்து மக்கள் இந்த உண்மையை எந்த அளவிற்கு அறியாதவர்களாக இருந்தார்கள் என்றால் திருக்குர்ஆன் விரிவுரையாளர்கள் இந்த வசனத்திற்கு பொருள் கொடுப்பதில் மிகவும் கடினத்தை உணர்ந்தார்கள். மேலும் அப்போது நடைமுறையில் இருந்த சிந்தனைக்கேற்ப சாணம் மற்றும் இரத்தம் உருவாகுவதற்கிடையில் பால் உருவாகும் வகையில் ஏதோ ஒரு மாற்றம் நிகழ்கின்றது என்று கருதினர். கஷ்ஷாப் எழுதுகின்றார்; உணவு கால்நடையின் வயிற்றில் செல்லும் போது அதன் கீழ்ப் பகுதி சாணமாகிவிடுகின்றது. இடைப்பட்ட பகுதி பாலாக மாறிவிடுகின்றது. மேல் பகுதி இரத்தம் ஆகிவிடுகின்றது. ஆனால் சாணம் மற்றும் இரத்தத்தை கடந்து வரும்போது பாலுக்கான பொருள் வருகின்றது என்று வசனம் தெளிவாக கூறுகின்றது. அதாவது முதலில் சாணத்தின் நிலையில் இருக்கின்றது. பின்னர் இரத்தத்தின் நிலையில் பின்னர் பால் உருவாகின்றது. இந்த முதல் இரண்டு பொருள்களில் மனிதன் எதனையும் மகிழ்ச்சியுடன் உண்பதை விரும்புவதில்லை. சாணத்தை உண்பதையும் மனிதன் விரும்ப மாட்டான். மகிழ்ச்சியுடன் இரத்தத்தை குடிப்பதையும் மனிதன் விரும்ப மாட்டான். ஆனால் அதே இரத்தம் பாலாக மாறிவிடும் போது மனிதன் மிகவும் ருசித்து பருகிவிடுகின்றான்.

அதில் சாணத்தின் அசுத்தமும், இரத்தத்தின் விஷங்களில் எதுவும் மீதமிருப்பதில்லை.

சிறிய அளவில் கூட எவராலும் பாலை உருவாக்க முடியாது என்பது இந்த வசனத்தின் பொருள் அல்ல. ஏதாவது ஒரு நேரத்தில் மக்கள் சிறிது பாலை உருவாக்கிவிடுவதும் சாத்தியமாகும். ஆனால் அதனால் முழு உலகத்திற்கும் உணவை கொடுக்க முடியாது. பொதுவாக வாயுக்களிலிருந்து மக்கள் தண்ணீரை உருவாக்கி விடுகின்றனர். ஆனால் மேகங்களின் சில துளி தண்ணீர் பயன்படும் அளவில் கூட அவை பயன்படுவதில்லை.

அதே போன்று ஒருநேரத்தில் ஒரு நபர் புற்பூண்டுகளிலிருந்து பாலை உருவாக்கிவிட்டாலும் அதில் ஆச்சரியம் இல்லை. ஆயினும், தண்ணீர் கொடுக்கும் பணி மேகங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதைப் போன்று, அந்நிலையிலும் உணவு வழங்கும் பணி விலங்குகளிடமே இருக்கும்.

மனிதன் உணவை அசுத்தப்படுத்த முடியும். ஆனால் அதிலிருந்து அவனால் பாலை உருவாக்க முடியாது என்பதை இந்த வசனம் சுட்டிக் காட்டுகின்றது. அதேபோன்று மனிதன் நபிமார்களின் போதனைகளை எடுத்துக் கொண்டு அதனை சீர்கெடுக்க முடியும். ஆனால் மனித மூளையில் காணப்படும் சுத்தமற்ற இயல்பில் உள்ள உண்மைகளை தூய மற்றும் உயர்வான ஆன்மீக போதனைகளாக அவனால் உருவாக்க முடியாது.

(தஃப்ஸீர் கபீர் தொகுதி 4-பக்கம் 192, காதியான் பதிப்பு 2010)

* * * * * * *

## வருடாந்திர இஜ்திமாக்கள் 2022

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் மூஃமினீன் இந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதியா, மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ், மஜ்லிஸ் லஜ்னா இமாயில்லாஹ் ஆகிய கிளை அமைப்புகளுக்கான இஜ்திமாக்களை 21, 22, 23 அக்டோபர் 2022 (வெள்ளி, சனி, ஞாயிறு) ஆகிய தேதிகளில் நடத்துவதற்கு பரிவுகூர்ந்து ஒப்புதல் நல்கியுள்ளார்கள். ஜமாஅத் சகோதரர்கள் இதற்கேற்ப துஆக்கள் செய்தவாறு இந்த இஜ்திமாக்களில் பங்கு பெறுவதற்கு எல்லா முயற்சிகளையும் செய்யுங்கள்.

(சதர் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, பாரத்)

## நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்

**தொலைபேசி எண் : 1800 103 2131**

இந்த ***TOLL FREE*** எண்ணில்

∴போன் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 7 Thursday 16 June 2022 Issue No. 24

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.575/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

# ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் ஜெர்மனி சுற்றுப் பயணம் - 2013

**வாகிஃபாத்தே நவ் பிள்ளைகளுடனான சந்திப்பு**

கேள்வி – பதில்

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் பரிவுகூர்ந்து வாகிஃபாத்தே நவ் பிள்ளைகளுக்கு கேள்வி கேட்பதற்கு அனுமதி நல்கினார்கள்.

**கேள்வி** : ஜெர்மனியில் ஹேஸன் மாநிலத்தில் அரசாங்க அங்கீகாரம் பெற்ற முதல் இஸ்லாமிய ஜமாஅத் நாம் ஆவோம்.அதன் மூலம் நாம் கிறித்தவ தேவாலயங்களுக்கு சமமாகிவிட்டோம். இனி நாமும் பள்ளிக்கூடங்கள் போன்றவையெல்லாம் உருவாக்குவோமா? மேலும் வரி போன்றவையெல்லாம் வசூல் செய்வோமா? என்று ஒரு வாகிஃபா சிறுமி கேட்டார்.

**பதில்** : இதற்கு பதிலாக ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள். அதாவது பாகிஸ்தான் பாராளுமன்றம் நம்மை அரசு ரீதியில் முஸ்லிம் அல்லாதவராக ஆக்கிவிட்டது. ஜெர்மனி அரசாங்கம் நம்மை அரசாங்க முஸ்லிமாக ஆக்கிவிட்டது. ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்;

தற்போது நமக்கு இந்த அந்தஸ்து கிடைத்துள்ளது.இனி நீங்கள் எல்லா விஷயங்களையும் செய்ய முடியும். உங்களிடத்தில் அவ்வளவு வசதிகளும் வாய்ப்புகளும் இருக்கின்றன என்றால் நீங்கள் எல்லாம் செய்ய முடியும். ஆஃப்ரிக்காவிலும் நாம் (நமது ஜமாஅத்தை) பதிவு செய்துள்ளோம்.

அங்கு நாம் ஏற்கனவே பள்ளிக் கூடங்களை உருவாக்கியுள்ளோம். நமது நூற்றுக்கணக்கான பள்ளிக் கூடங்கள் உள்ளன. பல மருத்துவமனைகள் உள்ளன. ஏனைய பல்வேறு நிறுவனங்கள் உள்ளன. கம்ப்யூட்டர் பயிற்சி முகாம்கள் உள்ளன. எனவே இங்கும் ஜமாஅத் விரும்பினால் அதை உருவாக்குவதற்கு அனுமதி உள்ளது. ஜமாஅத்தால் Afford செய்ய முடியும் என்றால் செய்ய வேண்டும். கண்டிப்பாக செய்ய வேண்டும். இறுதியில் ஜமாஅத் இன்ஷாஅல்லாஹ் வளர உள்ளது. இங்கேயே நின்றுவிடக் கூடாது. நமது ஜமாஅத்திற்கு முஸ்லிம் அமைப்பு என்ற அந்தஸ்தை பெற்றுக் கொடுப்பது மட்டுமே நமது இலக்காக இருக்கவில்லை. நாம் தப்லீக் செய்ய வேண்டும். இஸ்லாம் அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தியை எட்ட வைக்க வேண்டும் என்பதே அசல் நோக்கம் ஆகும். இந்த நோக்கங்களை எடுத்துக் கொண்டு நீங்கள் முன்னால் சென்றால் பின்னர் இதே பள்ளிக் கூடங்கள் உங்களின் பள்ளிக் கூடங்களாகிவிடும். இது மட்டுமன்றி நீங்கள் உங்களின் சொந்த பள்ளிக் கூடங்களையும் திறந்து வாருங்கள்.

**கேள்வி** : தப்லீக் களத்தில் பல்வேறு வகையான கேள்விகள் கேட்கப்படுகின்றன. அதில் ஒன்று இஸ்லாத்தில் பெண்களின் பங்கு என்ன? என்பதாகும். இஸ்லாத்தில் ஆண்களிடமிருந்து பெண்கள் வெகு தொலைவில் நிற்கின்றனர். பல்வேறு துறைகளில் பெண்கள் ஆண்களுக்கு சமமாக பணி செய்யமுடிவதில்லை என்று கேட்பதாக ஒரு வாகிஃபா சிறுமி கூறினார்.

இந்தக் கேள்விக்கு பதில் அளித்தவாறு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள் : ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். கல்வி பயில்வது ஒவ்வொரு முஸ்லிம் ஆண் மீதும், பெண் மீதும் கடமையாகும். இனி இதன் பிறகு ஒவ்வொரு ஆணுக்கும், பெண்ணுக்கும் அல்லாஹ் சில பொறுப்புகளை கொடுத்துவிட்டான். நீங்கள் அனைத்து பணிகளையும் நிர்வகியுங்கள் என்று ஒருவரிடம் கூறியுனான். நீங்கள் குடும்பத்தை கவனியுங்கள். மேலும் உங்கள் சந்ததிகளுக்கு நல்ல முறையில் தர்பிய்யத் கொடுங்கள். உங்கள் அறிவை அவர்களின் தர்பிய்யத்தில் செலவிடுங்கள். அதன் மூலம் அவர்கள் நல்ல குடிமக்களாக திகழ்வார்கள் என்று ஒருவரிடமும் கூறியுள்ளான். நீங்கள் மருத்துவராக கூடாது. மேலும் நீங்கள் தொண்டு செய்யக் கூடாது என்று அல்லாஹ் பெண்களை எங்கேயும் தடுக்கவில்லை. முந்தைய காலத்தில் போர்களில் பெண்கள் டிரெஸ்ஸிங் செய்து வந்துள்ளனர்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள் : மார்க்க கல்வியைப் பொறுத்த வரை நீங்கள் மார்க்கத்தின் பாதியை ஆயிஷா(ரலி)அவர்களிடமிருந்து கற்றுக் கொள்ளுங்கள் என்று கூறியுள்ளார்கள். அதாவது ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடமிருந்து பாதி கல்வியையும், பாதி (மார்க்க)கல்வியை சஹாபிகளிடமிருந்தும் (கற்றுக் கொள்ளுங்கள்). எனவே இது ஒரு பெண்ணின் அந்தஸ்து ஆகும். இஸ்லாம் பெண்ணிற்கு எல்லாவற்றையும் வழங்கியுள்ளது. இஸ்லாம் பெண்ணிற்கு சொத்துரிமை வழங்கியுள்ளது. இஸ்லாம் பெண்ணிற்கு தனது விருப்பப்படி திருமணம் செய்து கொள்ளும் உரிமையை வழங்கியுள்ளது. இஸ்லாம் பெண்ணிற்கு மணவிலக்கு பெறுவதற்கான உரிமை வழங்கியுள்ளது. இந்த ஐரோப்பியர்கள், மேற்கத்தியர்கள் தற்போது ஐம்பது, நூறு வருடங்களாகத் தான் பேசுகின்றனர். இங்கு (பெண்)சுதந்திரம் மலர்ந்து ஐம்பது, அறுபது வருடங்களே ஆகின்றன. ஆனால் நமக்கு இந்த போதனைகள் மிகவும் முன்பே கிடைத்துவிட்டது.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: எங்கேயெல்லாம் தேவைகள் உள்ளனவோ அங்கெல்லாம் பெண்கள் வேலையும் செய்கின்றனர். எனவே நாங்கள் வேலை செய்யக் கூடாது என்ற எந்தக் கட்டுப்பாடும் (உங்களுக்கு) இல்லை. நமது பெண்கள் ஆசிரியைகளாக உள்ளனர். நமது பெண்கள் மருத்துவர்களாகவும் உள்ளனர். செவிலியர்களும் உள்ளனர். கம்ப்யூட்டர் அறிவியலிலும் உள்ளனர். ஆராய்ச்சி துறைகளிலும் உள்ளனர். தற்போது சுவிட்சர்லாந்தில் பிக்பேங்க்

இதன் தொடர்ச்சி 10-ஆம் பக்கம்...

**திருக்குர்ஆனிலிருந்து...**

(செவியேற்பவரே!) இப்ராஹீம் இவ்வாறு கூறிய நேரத்தை (நினைத்துப் பாரும்). என் இறைவா! இந்த (மக்கா) நகரத்தை அமைதிக்குரியதாக்கி வைப்பாயாக. நாங்கள் பொய்தெய்வங்களை வணங்குவதிலிருந்து என்னையும், என் சந்ததிகளையும் காப்பாயாக. (14:36)

A. Basheer Ahmad (Sec. Waqf-e-Jadid, Melapalayam)

O.A. NIJAM
99947 57172

**O.A.N. Doors & Steels**

V.A. SAIT
99430 30230



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-

**5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, { opp. Karuna Clinic } Tirunelveli-627005**

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad